நாணயக் கொள்கை அறிக்கை

2026 பெப்புருவரி

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நாணயக் கொள்கை அறிக்கையானது ஆண்டிற்கு இரு முறை வெளியிடப்படுகின்றது. இவ்வறிக்கையின் உள்ளடக்கம், 2026 சனவரி 28 அன்று மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை அறிவிப்புடன் முடிவுறுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 2026 சனவரியில் உள்ளவாறான நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது.

© இலங்கை மத்திய வங்கி

ISBN 978-624-6764-22-7

2026 பெப்புருவரி 13

உள்ளடக்கம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு 4

சுருக்க அறிக்கை 6

1. நாணயக் கொள்கைச் சுருக்கம் 8

2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு 10

2.1. அடிப்படை எதிர்வுகூறல் 10

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள் 10

உண்மை பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் 14

2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள் 15

உலகளாவிய சூழல் 15

இறைப் பாதை 16

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 16

2.3. அடிப்படை எதிர்கூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள் 16

பணவீக்க எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள் 17

பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள் 18

2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு 18

நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள் 18

பணவீக்கப் பாதை 20

3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள் 21

3.1. பணவீக்கம் 21

சிறப்புக் குறிப்பு அ: இலங்கையின் அண்மைய கால பணச்சுருக்க நிகழ்வினை விரிவாக ஆராய்தல் 26

3.2. உண்மைத் துறை 30

3.3. நாணயத் துறை 33

வட்டி வீதங்கள் 33

உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை 35

உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல் 36

3.4. வெளிநாட்டுத் துறை 39

சென்மதி நிலுவை 39

செலாவணி வீதம் 42

ஒதுக்குச் சொத்துக்கள் 43

3.5. இறைத் துறை 44

3.6. நிதியியல் துறை 45

3.7. உலகளாவிய அபிவிருத்திகள் 47

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதும் பேணுவதும் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. தாழ்ந்த மற்றும் நிலையான பணவீக்கத்தை பேணுவதன் மூலம் மத்திய வங்கியானது நீண்ட காலத்தில் உறுதியான பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்குப் பங்களித்து, இதனூடாக பொதுமக்களின் நல்வாழ்வுக்கு ஆதரவளிக்கின்றது.

மத்திய வங்கியானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கும் பேணுவதற்கும் நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையினை உருவாக்குவதற்கும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் நாணயக் கொள்கைச் சபை[1] பொறுப்பாகவுள்ளது. இக்கட்டமைப்பானது நிதி அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்கத்தினைப் பேணுவதனை இலக்காகக் கொண்டுள்ளது. இவ்வுடன்படிக்கை நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கை என அறியப்படுகின்றது. 2023 ஒத்தோபரில் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தற்போதைய உடன்படிக்கையானது காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கியினைத் தேவைப்படுத்துகின்றது[2]. இலக்கிலிருந்தான சாத்தியமான விலகல்களை அளவிடுதல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற நோக்கங்களுக்காக நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் (அதாவது 3.0 சதவீதம் - 7.0 சதவீதம்) ±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட இடைவெளியொன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு இடைவெளி மீறப்பட்டால் நிதி அமைச்சர் ஊடாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டுமென நாணயக் கொள்கைச் சபையினைத் தேவைப்படுத்துவதுடன், இது பொதுமக்களுக்கு கிடைப்பனவாகவும் காணப்படல் வேண்டும்.

பணவீக்க இலக்கினை அடையும் பொருட்டு, குறுங்காலச் சந்தை வட்டி வீதங்களை விரும்பத்தக்க பாதையில் வழிநடத்துவதற்கு மத்திய வங்கி அதன் கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் கீழ், மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் பணியாற்றுகின்றமையுடன், ஓரிரவுக் கொள்கை வீதமானது அதன் நாணய நிலையினை சமிக்ஞைப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான முதன்மை நாணயக் கொள்கைச் சாதனமாக செயற்படுகின்றது. அதற்கமைய, ஓரிரவுக் கொள்கை வீதம் அறிவிக்கப்பட்டவுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை ஓரிரவுக் கொள்கை வீதத்தில் அல்லது அண்மித்துப் பேணுவதற்கு மத்திய வங்கி அதன் நாணயத் தொழிற்பாடுகளை மேற்கொண்டு அளவமைக்கின்றது. அவ்வாறு செய்கையில், நிலவுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு திரவத்தன்மை நிலைமைகளுக்கும் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. அதனைத்தொடர்ந்து, நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஓரிரவுச் சந்தை வட்டி வீதங்கள் நிதியியல் சந்தைகளினூடாக பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்பட்டு, இறுதியாக பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் முன்னோக்கிய பார்வையிலமைந்தவையாகவும் தரவினால் உந்தப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. நாணயக் கொள்கை நடவடிக்கைகள் காலதாமதமொன்றுடன் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றதென்பதனால் முன்னோக்கிய பார்வையிலமைந்ததோர் அணுகுமுறை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ஆறு தடவைகள் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை கூடுகின்றது. அதன் தீர்மானங்களை மேற்கொள்வதில், நாணயக் கொள்கைச் சபையானது தற்போதைய பணவீக்க இயக்கவாற்றல்கள் மற்றும் அதன் தோற்றப்பாடு,

[1] இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது ஆளுநர், ஆளும் சபை உறுப்பினர்கள், விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றிற்குப் பொறுப்பான துணை ஆளுநர்கள் மற்றும் பொருளியல் அல்லது நிதியியலில் நிபுணர்களாக இருக்கும் இரண்டு வேறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

[2] பணவீக்க இலக்கானது 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மக்களிற்குத் தொடர்பூட்டப்பட்டது. காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாத காலப்பகுதியில் மாதாந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்காண்டு சதவீத மாற்றங்களின் எளிய சராசரியினைக் குறிக்கின்றது.

பொருளாதாரத்தின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் மற்றும் அத்தகைய எறிவுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றை மதிப்பீடுசெய்கின்றது. மதிப்பீடானது எறிவுசெய்யப்பட்ட முக்கிய உலகளாவிய போக்குகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றையும் பரிசீலனையில் கொள்கின்றன. இக்கூட்டங்களில் ஆராயப்படும் எறிவுகளானவை கிடைக்கப்பெற்ற தரவுகள், முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் பற்றிய அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய குறிகாட்டிகளின் எறிவுகள் அதேபோன்று நிபுணத்துவ அலுவலர் தீர்மானங்கள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டுள்ளன. ஆளுநரின் தலைமையிலான உள்ளகக் குழுவொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கைக் குழுவானது விரிவான தொழில்நுட்ப மற்றும் கொள்கை ரீதியான உன்னிப்பான பரிசீலனைகளுக்குப் பின்னர் நாணயக் கொள்கைச் சபையின் மீளாய்விற்கான கொள்கைப் பரிந்துரைகளை வழங்குகின்றது.

நெகிழ்ச்சியத்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் முக்கிய கூறொன்றான நாணயக் கொள்கை அறிக்கை, மத்திய வங்கிச் சட்டத்தின் 27 மற்றும் 80ஆம் பிரிவுகளின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றது. இப்பிரிவுகள் பணவீக்கத்தின் அண்மைய போக்குகள், பணவீக்கத்தின் அடிப்படை மூலங்கள், நடுத்தரகால பணவீக்க எறிவுகள் மற்றும் அவ்வெறிவுகளிற்கான முக்கிய இடர்நேர்வுகள் மற்றும் அதன் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் நோக்கங்களின் அடைவு என்பவற்றினைத் தெளிவுபடுத்துகின்ற அறிக்கையொன்றினை ஆண்டிற்கு இருமுறை வெளியிடுவதற்கு மத்திய வங்கிக்கு ஆணையளிக்கின்றன. இவ்வறிக்கையானது, கொள்கை வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றுக்கான மத்திய வங்கியின் கடமைப்பொறுப்பிற்கு சான்றுபகர்கின்றது. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் என்பவற்றின் நடப்புப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் அது பணியாற்றுகின்ற அதேவேளை, பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு பற்றிய மதிப்பீட்டையும் அதனுடன் தொடர்புடைய இடர்நேர்வையும் வழங்குகின்றது.

வரைபடம் 01: இலங்கையில் நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளுகின்ற செயன்முறை
(ஆண்டொன்றிற்கு ஆறு தடவைகள்)



சுருக்க அறிக்கை

இலங்கையின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடானது முக்கிய கட்டமைப்புசார் மற்றும் கொள்கை மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் ஒன்றிணைந்து 2025இல் தொடர்ந்தும் வலுவடைந்தது. இவ்வாண்டு கடுமையான உள்நாட்டு மற்றும் உலகளாவிய அதிர்வுகளைக் கொண்டிருந்த போதிலும் பொருளாதாரமானது தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டி, உறுதிப்பாட்டை மீளமைப்பதிலும் பொருளாதார அடிப்படைகளை மீளவலுப்படுத்துவதிலும் அடையப்பட்ட ஆக்கபூர்வமான முன்னேற்றத்தையும் கொள்கைசார் தாங்கியிருப்புக்களை வலுப்படுத்துவதற்கு தீர்மானம்மிக்க வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்த தன்மையையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

பதினொரு மாதகால பணச்சுருக்க நிலை முடிவுற்றதை அடையாளப்படுத்தி, பணவீக்கம் 2025 ஓகத்தில் நேர்க்கணியமாகத் திரும்பலடைந்தது. அதன்பின்னர், பணவீக்கமானது படிப்படியாக உயர்வடைந்து 2025 ஒத்தோபர் தொடக்கம் திசெம்பர் வரையிலும் தொடர்ச்சியாக மூன்று மாதங்களாக மாற்றமின்றிக் காணப்பட்டது. திசெம்பரில் உணவு விலைகள் மீது சில மேல்நோக்கிய அழுத்தத்தை இடம்பெறச்செய்த டித்வா புயலினால் ஏற்பட்ட தற்காலிக வழங்கல் சங்கிலி இடையூறுகளுக்கு மத்தியில் ஒட்டுமொத்த பணவீக்கம் உறுதியாகக் காணப்பட்டது.

பணவீக்கம் படிப்படியாக அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 2026இன் இரண்டாம் அரையாண்டளவில் 5 சதவீத இலக்கினை நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வதிகரிக்கின்ற எறிவுப்பாதைக்கு கேள்வி நிலைமைகளில் படிப்படியான மீட்சி பரந்தளவில் காரணமாக அமையக்கூடிய அதேவேளை எதிர்பார்க்கப்பட்ட வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம் அதன் வழமையான வேகத்திற்கு படிப்படியான மாறுதல் மற்றும் ஒப்பீட்டளவில் உயர்வடைந்த தளம்பல் உணவுப் பணவீக்கம் என்பனவும் இப்பாதைக்கு ஆதரவளிக்கின்றது. பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன் பணவீக்கம் நடுத்தர காலத்தில் 5 சதவீத இலக்கினை அண்மித்து உறுதிநிலையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மைப் பணவீக்க இலக்கிற்கு இசைவான மட்டத்தில் மையப் பணவீக்கமும் உறுதிநிலையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்க எதிர்பார்க்கைகளுக்கான மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இரு வகையான இடர்நேர்வுகளும் காணப்படுகின்ற அதேவேளை, ஒட்டுமொத்த இடர்நேர்வுச் சமநிலை அண்மைய மற்றும் நடுத்தரகாலத்தில் பரந்தளவில் நடுநிலையாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் குறைவடைந்த பணவீக்க நிலைமைகள் மற்றும் மிதமான பணவீக்கத் தோற்றப்பாட்டினால் துணையளிக்கப்பட்டு, மத்திய வங்கி அதன் தளர்வான நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2025இன் பிந்திய பகுதியினை நோக்கி குறுங்காலப் பணச் சந்தை வட்டி வீதங்களில் சில இறுக்கமடைதல் சகித்துக்கொள்ளப்பட்ட போதிலும், அதன்பின்னர் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் வங்கிகளுக்கு மத்தியில் திரவத்தன்மையின் மிகவும் சமமான பரம்பல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு இவ்விறுக்கமாக்கல் தளர்வடைந்தது. ஒட்டுமொத்தமாக சந்தை வட்டி வீதக் கட்டமைப்பு 2025 காலப்பகுதியில் கீழ்நோக்கி சீராக்கப்பட்டது. தாழ்வான வட்டி வீதச் சூழலில் மேம்படுகின்ற பொருளாதார நடவடிக்கை மற்றும் அதிகரித்த வாகன இறக்குமதிகள் என்பவற்றைப் பிரதிபலித்து ஆண்டுகாலப்பகுதியில் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்கள் தொடர்ந்தும் விரிவடைந்தது.

நடைமுறைக் கணக்கு தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக மிகையொன்றினைப் பதிவுசெய்துள்ளது என்ற மதிப்பீட்டுடன் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் 2025இல் மேம்பட்டது. இலங்கை ரூபாய் 2025இல் ஐ.அ.டொலருக்கெதிராக 5.6 சதவீத்தால் தேய்வடைந்த அதேவேளை 2026இன் ஆரம்பத்தில் பரந்தளவில் உறுதியாகக் காண்படுகின்றது. நெருக்கடிக்குப் பிந்திய நாட்டின் அதிஉயர்வான வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவிற்கு மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் பல்தரப்பு நிறுவனங்களிலிருந்து கிடைத்த உட்பாய்ச்சல்களுடன் ஒன்றிணைந்து மத்திய வங்கி மூலமான குறிப்பிடத்தக்க தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவினால் துணையளிக்கப்பட்டு 2025 இறுதியளவில் அதிகரித்தது.

இறைத்துறைச் செயலாற்றமானது நிலையான வருவாய் அடிப்படையிலமைந்த இறைத்திரட்டல் வழிமுறைகள் மூலம் 2025இன் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் வலுவடைந்தது. டித்வா புயலினால் ஏற்பட்ட சேதங்களுக்கு பதிலிறுத்தி 2026 இற்கான குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டமொன்றினால் துணையளிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதற்கான முயற்சிகள் உள்ளடங்கலாக அரசாங்கம் தொடர் நிவாரண வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

2025இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் பொருளாதாரம் ஆற்றல்வாய்ந்த விரிவடைதலைப் பதிவுசெய்தது. 2025இன் பிந்திய பகுதியில் டித்வா புயலினால் ஏற்பட்ட இடையூறுகளின் பின்னர் உடனடியாக பொருளாதார நடவடிக்கையில் மெதுவடைதலுக்கு மத்தியில் உரியகால கொள்கைத் தலையீடுகள் விரைவான மீட்சிக்கு ஆதரவளித்து, துறைகளுக்கிடையில் சாதகமான கசிவுத்தாக்கங்களை உருவாக்கி ஒட்டுமொத்த பொருளாதார உத்வேகத்தையும் மீள்வலிமைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதனூடாக வரவிருக்கும் காலத்தில் மிகுந்த தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் எடுத்துக்காட்டுகின்றது. பொருளாதார நடவடிக்கையில் தொடர்ச்சியான தாக்குப்பிடிக்கும் தன்மையை முன்னணிக் குறிகாட்டிகள் சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை, வலுவான கொடுகடன் விரிவடைதலும் நிலவுகின்ற தளர்வுமிக்க நாணய நிலைமைகளும் இவ்வுத்வேகத்திற்கு மேலும் துணையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், அதிகரிக்கின்ற உலகளாவிய வர்த்தக சவால்களிலிருந்து தோன்றுகின்ற வெளிநாட்டுத் தாக்கங்கள் அத்துடன் தீவிரமடைந்துள்ள புவிசார் அரசியல் நிச்சயமின்மைகள் என்பன ஒட்டுமொத்த பொருளாதாரச் செயலாற்றத்திலும் வளர்ச்சி எதிர்பார்க்கைகளிலும் தாக்கம் செலுத்தக்கூடும்.

1. நாணயக் கொள்கைச் சுருக்கம்

இலங்கை மத்திய வங்கி 2025 இலும் 2026இன் இதுவரையிலும் அதன் தளர்வான நாணயக் கொள்கை நிலையினை தொடர்ந்தும் முன்னெடுத்தது. ஓரிரவு கொள்கை வீதம் 2025 மேயில் 25 அடிப்படைப் புள்ளிகளினால் 7.75 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதிலிருந்து கொள்கை வட்டி வீதம் அதே மட்டத்திலேயே பேணப்பட்டது. இக்கொள்கை நிலையினைத் தொடர்வதற்கு தாழ்வான பணவீக்கம் தொடர்ச்சியாகக் காணப்பட்டமை மற்றும் ஒட்டுமொத்த கேள்வியின் படிப்படியான மீட்சிப் பின்னணியில் தாழ்வான அத்துடன் நிலையான பணவீக்க எதிர்பார்க்கை என்பன பெருமளவில் துணையளித்தன.

2025 மேயில் கொள்கை வட்டி வீதக் குறைப்பிற்குப் பின்னர், 2025 செத்தெம்பரின் 5ஆவது நாணயக் கொள்கை மீளாய்வில், தொடர்ச்சியாக இரண்டாவது மீளாய்விலும் ஓரிரவு கொள்கை வீதத்தினை தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது. தொடர்ச்சியாக பதினொரு மாத பணச்சுருக்கத்தின் பின்னர், எதிர்பார்க்கப்பட்டவாறு 2025 ஓகத்தில் பணவீக்கம் நேர்க்கணியப் பாதைக்கு திரும்பலடைந்ததமை இதற்கு துணையளித்திருந்தது. மேலும், பணவீக்க எதிர்பார்க்கைகள் இலக்கை அண்மித்து நகருதலுடன் பணவீக்கம் படிப்படியாக இலக்கினை நோக்கிச் ஒருங்கிணைந்துசெல்லுமென எறிவுசெய்யப்பட்டிருந்தது. அதேவேளை, சந்தை வட்டி வீதங்களில் முன்னெடுக்கப்படுகின்ற கீழ்நோக்கிய சீராக்கங்கள், உயர்வான வளர்ச்சி உத்வேகம் மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க வெளிநாட்டுத் துறை என்பனவும் தீர்மானத்திற்குச் சாதகமாக அமைந்தன.

2025 நவெம்பரில் இறக்குமதிக் கேள்வியில் விரிவடைதல் தாமதமாக அவதானிக்கப்பட்ட தேய்மான அழுத்தங்களுக்கு மத்தியில் பணவீக்கம் தாமதமாக அதன் இலக்கை நோக்கி நகர்வதற்கு எறிவுசெய்யப்பட்டிருந்தமையினால் கொள்கை வீதத்தை மத்திய வங்கி மாற்றமின்றி வைத்திருந்தது. இதற்கு மேலதிகமாக, நாணய நிலைமைகள் போதுமானளவில் தளர்வுமிக்கதாகக் காணப்பட்டு, தனியார் துறைக்கான கொடுகடனின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கு ஆதரவளித்து, அதிகரிக்கின்ற பொருளாதார நடவடிக்கை மற்றும் உயர்வடைகின்ற இறக்குமதிக்கான குறிப்பாக, வாகன இறக்குமதிகள் என்பவற்றுக்கு துணையளிப்பதற்கு கொடுகடன் பாய்ச்சல்களுக்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தது.

அடையப்பெற்ற மிதமான பணவீக்கம் மற்றும் 2026 இரண்டாம் காலாண்டளவில் எதிர்பார்க்கப்படும் இலக்கை நோக்கி பணவீக்கம் ஒருங்கிசைந்துசெல்லல் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, ஓரிரவு கொள்கை வீதம் 2026 சனவரியின் அண்மைய நாணயக் கொள்கை மீளாய்வில் அதேமட்டத்தில் பேணப்பட்டது. டித்வா புயலின் தாக்கத்திற்கு மத்தியில் வலுவான வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்துடன் இணைந்து உள்நாட்டு பொருளாதார நடவடிக்கையின் தொடர்ச்சியான தாக்குப்பிடிக்கும் தன்மை இத்தீர்மானத்திற்கு ஆதரவளித்து. அதேவேளை, தனியார் துறை கொடுகடனில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட பாரிய விரிவாக்கமும் நடுநிலையான நிலைக்கு தேவைப்படுத்தியது. இருந்தபோதிலும், முன்னோக்கிச்சென்று பொருத்தமான கொள்கை நிலையினைத் தீர்மானிப்பதற்கு, மத்திய வங்கி, ஏனையவற்றிற்கு மத்தியில் உள்நாட்டுப் பக்க அபிவிருத்திகளையும் அதேபோன்று உலகளாவிய புவிசார் அரசியலைச் சூழ்ந்துள்ள நிலைமைகளையும் கொள்கை நிச்சயமின்மைகளையும் தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணிக்கும்.

சுருக்கமாக, மத்திய வங்கியானது, 2023 யூனில் தொடங்கிய நாணயக் கொள்கைத் தளர்த்தல் சுழற்சியின் போது மொத்தமாக ஏறத்தாழ 800 அடிப்படைப் புள்ளிகளால் (8.0 சதவீதப் புள்ளிகள்) அதன் கொள்கை வட்டி வீதத்தைக் குறைத்துள்ளது.

நாணயக் கொள்கைச் சபை ஆண்டின் இரண்டாவது நாணயக் கொள்கை மீளாய்விற்காக 2026 மாச்சில் கூடும்.

இறுதி நாணயக் கொள்கை அறிக்கையிலிருந்தான நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் (2025 ஓகத்து – 2026 சனவரி)

2025 இல.05

2025 செத்தெம்பர்

ஓரிரவுக் கொள்கை வீதம் 7.75% ஆகப் பேணப்பட்டது

2025 இல.06

2025 நவெம்பர்

ஓரிரவுக் கொள்கை வீதம் 7.75% ஆகப் பேணப்பட்டது

2026 இல.01

2026 சனவரி

ஓரிரவுக் கொள்கை வீதம் 7.75% ஆகப் பேணப்பட்டது

2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு

பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் எறிவுகளை மையமாகக் கொண்டு, 2026 சனவரி மாத நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில், மத்திய வங்கியின் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் இப்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன[3]. இவ்வெறிவுகள், 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த தரவுகள், முக்கிய மாறிகளின் அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய பேரண்டப்பொருளாதார எறிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் ஊழியர் தீர்மானங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவ்வெறிவுகள் இவ்வறிக்கையில் அடிப்படை எதிர்வுகூறலாகக் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

2.1. அடிப்படை எதிர்வுகூறல்

சமீபத்திய அண்மைய கால எறிவுகளின் பிரகாரம், எதிர்வரும் மாதங்களில் பணவீக்கம் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வலுவடைந்து வரும் கேள்வி நிலைமைகளின் ஆதரவுடன், முதன்மைப் பணவீக்கமானது தொடர்ந்து அதிகரித்து, 2026ஆம் ஆண்டின் இரண்டாமரைப்பகுதியில் 5 சதவீத இலக்கை நோக்கி நகரும் என நடுத்தர கால எறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. பொருத்தமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நடுத்தர காலத்தில் பணவீக்கம் இலக்கைச் சுற்றி நிலைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது எதிர்வுகூறல்கள், “டித்வா” புயலுடன் தொடர்புடைய இடையூறுகளைப் பிரதிபலித்து 2025இன் நான்காம் காலாண்டில் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது, 2025ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளை விடக் குறைவாக இருந்துள்ளமையை எடுத்துக்காட்டுகின்றன. இதனைக் கருத்திற் கொள்கையில், 2025ஆம் ஆண்டிற்கான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4.5 சதவீதத்தை அண்மித்ததாக இருக்கக்கூடும். அதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளில் பதிவான வளர்ச்சி உத்வேகத்தைத் தொடரும் வகையில், 2026ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சியானது 4 சதவீதம் தொடக்கம் 5 சதவீதம் வரையான வீச்சிற்குள் அமையுமென தற்போது எறிவுசெய்யப்பட்டுள்ளது. நடுத்தர காலத்தில் வளர்ச்சி மிதமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், தளம்பல்மிக்க உலகளாவிய புவிசார் அரசியல் சூழல் மற்றும் பொருளாதாரத்தில் நடந்துவரும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்களிலிருந்தான ஏதேனும் சாத்தியமான நேர்க்கணியக் கசிவுகள் காரணமாக, இவ்வாய்ப்புக்கள் கணிசமான நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டுள்ளன.

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள்[4]

பணச்சுருக்கப் பகுதியொன்றைத் தொடர்ந்து, 2025 ஓகத்தில் நேர்க்கணியப் புலத்தை அடைந்ததிலிருந்து, மையப் பணவீக்கத்தின் சிறிதளவான உயர்வு மற்றும் 2025 யூனில் மின்சாரக் கட்டண அதிகரிப்பினால் பகுதியளவில் செல்வாக்குச்செலுத்தப்பட்டு வலு மற்றும் போக்குவரத்து பணச்சுருக்கம் தளர்வடைந்தமை ஆகியவற்றால் பணவீக்கமானது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. எதிர்வரும் காலப்பகுதியில்

[3] மத்திய வங்கியானது நடுத்தர கால பேரண்டப் பொருளாதார எறிவுகளைப் பெறுவதற்கு பகுதியளவிலான கட்டமைப்புசார் பேரண்டப்பொருளாதார மாதிரியான காலாண்டு எறிவு மாதிரியைப் பயன்படுத்துகின்றது. உலகளாவிய பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதாந்த பணவீக்கத் தரவுகள் மற்றும் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவுகள் உள்ளிட்ட அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் குறித்த தரவுகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு நாணயக் கொள்கை சுற்றின் போதும் இவை இற்றைப்படுத்தப்படுகின்றன. மாதிரி உட்கட்டமைப்பில் தொடர்ச்சியான மேம்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஒட்டுமொத்த பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டுள்ள அண்மைய அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில், காலாண்டு எறிவு மாதிரியின் சில மாறிகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

[4] முதன்மைப் பணவீக்கமானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI, 2021=100) இனை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது.

பணவீக்கம் அதன் படிப்படியான அதிகரிப்பைத் தொடர்ந்து, 2026ஆம் ஆண்டின் இரண்டாமரைப்பகுதியில் இலக்கை நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த பாதையானது, கேள்வி நிலைமைகளின் படிப்படியான அதிகரிப்பையும், பணச்சுருக்கத்தின் நீடிக்கப்பட்ட பகுதியொன்றைத் தொடர்ந்து வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம் என்பவற்றின் நேர்க்கணிய மட்டங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட திரும்பலையும் பிரதிபலிக்கின்றது. 2026இன் முதலாம் காலாண்டில் மின்சாரக் கட்டணத் திருத்தம் எதிர்பார்க்கப்படாமையினால், வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கம் முன்னர் எறிவுசெய்யப்பட்டதை விட தற்போது அதிகளவில் படிப்படியாக உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருத்தமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் முதன்மைப் பணவீக்கமானது அதன் படிப்படியாக அதிகரிக்கின்ற வேகத்தைத் தொடர்வதுடன் 5 சதவீத இலக்கை நோக்கி ஒருங்கிணையுமென நடுத்தர கால எறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

வரைபடம் 02: அடிப்படை முதன்மைப் பணவீக்க எதிர்வுகூறல் (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)
2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றின் எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது



***மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சருக்கு இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) உடன்படப்பட்டது.*
குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.
மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

குறிப்பு: எதிர்வுகூறலொன்று என்பது வாக்குறுதியொன்றோ அன்றில் கடப்பாடொன்றோ அல்ல

2026 சனவரியில் நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. அவை உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்க பெடரல் நிதியங்கள் வீதத்தினால் குறித்துரைக்கப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் அதன்மூலம் தோற்றம்பெறுகின்ற செலாவணி வீதங்கள் உள்ளடங்கலாக பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகக் காணப்படுகின்றன. மேலும், அடிப்படை எறிவுகளில் முக்கிய பேரண்டப்பொருளாதாரக் கொள்கை நகர்வுகளெதுவும் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆதலால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் தொடர்ச்சி மற்றும் இறைத் திரட்சி மீதான முயற்சிகள் என்பன உள்ளார்ந்தமாகக் குறித்துக்காட்டப்படுகின்றன. அடிப்படை ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம், எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். வீச்சு வரைபடங்களுடன் இணைந்து, நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். தளம்பலான உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திலுள்ள நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு சாத்தியமான மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளிற்கு உள்ளாகின்றன. அடிப்படை எதிர்வுகூறலிற்கான இடர்நேர்வுகள் குறித்த விவரங்கள் "அடிப்படை எறிவுகளின் அடைவிற்கான இடர்நேர்வுகள்" பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தின் அடிப்படை கேள்வி நிலைமைகளைப் பிரதிபலிக்கும் மையப் பணவீக்கம், படிப்படியாக அதிகரித்து முதன்மைப் பணவீக்க இலக்குடன் இசைந்துசெல்லும் மட்டமொன்றில் நிலைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு கேள்வி நிலைமைகளின் எதிர்பார்க்கப்பட்ட வலுப்படுத்தல், மையப் பணவீக்கத்தில் இப்படிப்படியான அதிகரிப்பிற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், உலகளாவிய உணவு விலைகள் மற்றும் உலகளாவிய பணவீக்கப் போக்குகளால் பகுதியளவில் உந்தப்படும் இறக்குமதிப் பணவீக்கமும், மையப் பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட போக்கிற்கு பங்களிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இக்காரணிகள், மையக் கூடையிலிருந்து விலக்கப்பட்ட தளம்பல்மிக்க உணவு, மற்றும் வலு மற்றும் போக்குவரத்து கூறுகள் தவிர்ந்த, நாளாந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அடிப்படைச் செலவுக் கட்டமைப்பு எதிர்வரும் காலப்பகுதியில் எவ்வாறு பரிணமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென்பதை எடுத்துக்காட்டுகின்றன. இதன் விளைவாக இது பொருளாதாரத்தில் அடிப்படை பணவீக்கப் போக்குகளின் எறிவுசெய்யப்பட்ட பாதையை வழிநடத்துகின்றது.

வரைபடம் 03: அடிப்படை மையப் பணவீக்க எதிர்வுகூறல் (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண்,ஆண்டிற்காண்டு)
2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது



குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.
மேலே வரைபடம் 02 இலுள்ள விளக்கக்குறிப்பினைப் பார்க்க.

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக பெருமளவில் எதிர்க்கணிய மட்டங்களில் காணப்பட்ட வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம், அண்மைய மாதங்களில் குறைந்த பணச்சுருக்க மட்டங்களை அடைந்து, படிப்படியான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்துள்ளது. புள்ளிவிபரத் தளத் தாக்கத்தின் பகுதியளவிலான பங்களிப்புடன், அண்மைய காலத்தில் நேர்க்கணிய நிலைக்குத் திரும்பலடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் முதன்மைப் பணவீக்கமானது இலக்கை நோக்கி படிப்படியாக அதிகரிப்பதற்குப் பங்களிக்கும். எனினும், வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கமானது உலகளாவிய எரிபொருள் விலை மாற்றங்களில் அபிவிருத்திகளின் அடிப்படையில் காணப்பட்டு இதற்கான

தோற்றப்பாடானது குறிப்பாக அண்மைய புவிசார் அரசியல் பதற்றங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், அதிகரித்த நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டிருக்கும். வானிலை தொடர்பான நிச்சயமற்றதன்மைகளும் வலுப் பணவீக்கத்திற்கான தோற்றப்பாட்டை வடிவமைக்கலாம்.

வரைபடம் 04: வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)[5]



மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

இதேவேளை, பணவீக்கத்தின் ஏனைய கூறுகளுடன் ஒப்பிடுகையில், தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கம் அண்மைய காலத்தில் உயர்வடைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. டித்வா புயல் காரணமாக வேளாண்மை வெளியீட்டின் மீதான தாக்கம், வழமையான உற்பத்தி மற்றும் அறுவடைச் சுழற்சிகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான இடையூறுகள் மற்றும் தாமதங்கள் காரணமாக, தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கத்தில் ஓரளவு மேல்நோக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எவ்வாறாயினும், புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் உடனடி மீள்பயிர்ச்செய்கை மற்றும் மீட்பு முயற்சிகள் இத்தாக்கத்தைக் குறைப்பதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன. அண்மைக்காலத்தில் அடிக்கடி நிகழும் பாதகமான வானிலை நிகழ்வுகளின் அனுபவங்களைக் கருத்தில்கொள்கையில், தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கத்தின் பாதையானது குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையைக் கொண்டதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வரைபடம் 05: முதன்மைப் பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)[5]



மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

[5] தளத்தாக்கம் மற்றும் உத்வேகம் தொடர்பான விரிவான கலந்துரையாடலுக்கு நாணயக் கொள்கை அறிக்கை – ஓக 2025 இன் சிறப்புக் குறிப்பு அ இனைப் பார்க்க.

பணவீக்க எதிர்பார்க்கைகள்

மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் அளவீட்டின் பிரகாரம், கம்பனித் துறையின் குறுகிய கால பணவீக்க எதிர்பார்க்கைகள் அடையப்பட்ட பணவீக்கத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில் பரந்தளவில் நகர்ந்தன. இதற்கமைய, 3 மாத, 6 மாத மற்றும் 1 ஆண்டிற்கு அப்பாலான காலங்களுக்கான பணவீக்க எதிர்பார்க்கைகள் 2025 யூன் தொடக்கம் 2025 திசெம்பர் வரை ஒட்டுமொத்த மேல்நோக்கிய போக்கொன்றைப் பின்தொடர்ந்தன. இதேவேளை, 2 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகால வீச்சுகளைக் கொண்ட கம்பனித் துறையின் நடுத்தர கால பணவீக்க எதிர்பார்க்கைகளும் அதே காலப்பகுதியில் அதிகரித்து 5 சதவீத பணவீக்க இலக்கை நோக்கி ஒருங்கிணைந்தன.

உண்மை பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்

முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகள், அளவீட்டுக் கண்டறிகைகள் மற்றும் அலுவலர் மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் அவதானிக்கப்பட்ட நிலையான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மெதுவடைதலொன்றைப் பிரதிபலித்து, 2025 நான்காம் காலாண்டில் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மிதமடைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வேளாண்மை அல்லாத துறைகளில் மெதுவடைதலின் வேகம் மிதமடையுமென எதிர்பார்க்கப்பட்டிருப்பினும், டித்வா புயலுடன் தொடர்பான இடையூறுகள் இம்மிதமடைதலுக்குப் பிரதானமான காரணமாகக் கருதப்படுவதுடன், இது அனைத்துத் துறைகளிலும் பரந்தளவில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2025ஆம் ஆண்டின் இரண்டாமரைப்பகுதியிலிருந்து அதிகளவில் புள்ளிவிபரத் தளத் தாக்கங்களைப் பிரதிபலித்து, 2026ஆம் ஆண்டில் அதிக தளம்பல்களுடன் அண்மைக்கால வளர்ச்சித் தோற்றப்பாடானது மிதமான பாதையொன்றை எடுத்துக்காட்டுகின்றது. தளர்வடைந்த நாணய நிலைமைகள் வளர்ச்சிக்கு ஆதரவாக காணப்படுவதுடன், டித்வா புயலைத் தொடர்ந்து அதிகரித்த அரச செலவினங்களும் அண்மைய காலத்தில் விரிவானதொரு ஆதரவை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பின்னணியில், அண்மைய காலத்தில் பூஜ்ஜியத்திற்கு அண்மித்ததாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்த வெளியீட்டு இடைவெளி, நடுத்தர காலத்தில் நேர்க்கணியமாக திரும்பலடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. இதேவேளை, இக்காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப கணக்கு மிகைகளிலிருந்து ஏற்படும் எதிர்க்கணிய இறைத் தூண்டுதலால் நடுத்தர கால வளர்ச்சி வேகம் பகுதியளவில் பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், நோக்கணிய வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளி குறுகி அண்மைய காலத்தில் எதிர்க்கணியமாக திரும்பலடைந்து மேம்பட்ட மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் வளர்ச்சி வேகம் மிதமடைவதனால் நடுத்தர காலத்தில் தொடர்ந்து எதிர்க்கணியமாக இருக்குமெனவும் மதிப்பிடப்படுகின்றது.

நடுத்தர கால பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு கணிசமான நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய பொருளாதார மீட்சி உத்வேகத்தின் தொடர்ச்சியானது இலக்கிடப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் உபாயங்கள் ஆகியவற்றின் காலந்தவறாத மற்றும் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலின் மீது நிபந்தனைக்குட்பட்டதாகும். மேலும், மீண்டெழும் வானிலை தொடர்பான அதிர்வுகள், நிலைபேறான மற்றும் காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற கொள்கைகளின் அவசியத்தை வலியுறுத்தி இடைக்காலத்திலிருந்து நீண்ட கால வளர்ச்சியைத் தடுக்கலாம். உலகளாவிய வர்த்தகம் மற்றும் கொள்கை நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில், இலங்கையின் வர்த்தகப்

பங்காளர்களின் வளர்ச்சித் தோற்றப்பாட்டில் அபிவிருத்திகள் எதிர்வரும் காலப்பகுதியில் இலங்கையின் வளர்ச்சிப் பாதையையும் வடிவமைக்கும்.

வரைபடம் 06: அடிப்படை காலாண்டு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி எதிர்வுகூறல் (ஆண்டிற்காண்டு)

2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது



மேலே வரைபடம் 02 இலுள்ள விளக்கக்குறிப்பினைப் பார்க்க.

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்

2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் நடுத்தர கால எதிர்வுகூறல்களை அடைவதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் சுருக்கமொன்று இப்பகுதியில் தரப்பட்டுள்ளது.

உலகளாவிய சூழல்

2025ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வளர்ச்சி விளைவுகள் மற்றும் 2026 இற்கான தோற்றப்பாடு என்பன முன்னர் எதிர்பார்த்ததை விட வலுவாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அமெரிக்காவில் அண்மைய வர்த்தகக் கொள்கை அபிவிருத்திகள் மற்றும் தற்போதைய புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், உலகளாவிய பொருளாதார நிலைமைகள் உயர்வடைந்த நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டுள்ளன. வர்த்தகம் தொடர்பான உராய்வுகள், புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள் மற்றும் ஒப்பீட்டளவில் இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகள் இருந்தபோதிலும், முன்னேற்றமடைந்த மற்றும் வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் நடுத்தர காலத்தில் படிப்படியாக மிதமானதாக மாறுவதற்கு முன்னர், அண்மைய காலத்தில் ஒப்பீட்டளவில் தாக்குப்பிடிக்கும்தன்மையுடன் இருக்குமென

எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய எறிவுகள் மாதிரி வலையமைப்பிற்கமைய,[6] ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது[7] ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலய மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றில் எதிர்பார்க்கப்பட்ட மெதுவடைதலொன்றுக்கு மத்தியில் நடுத்தர காலத்தில் மந்த நிலையில் காணப்பட்டு, பலவீனமடைந்து 2026ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எதிர்க்கணியத்திற்குத் திரும்பலடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. தொடர்ச்சியான பணவீக்க அழுத்தங்களின் சமிக்ஞைகள் தென்படுவதால், பணவீக்க இடர்நேர்வுகள் மற்றும் அதிகரித்த நிச்சயமற்றதன்மையைக் கருத்தில்கொண்டு, ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசர்வ் எச்சரிக்கையான நிலைப்பாடொன்றைப் பேணி வரும் நிலையில், ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கைத் தளர்வானது படிப்படியாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புவிசார் அரசியல் அபிவிருத்திகள் மற்றும் வளர்ச்சியடைந்துவருகின்ற உலகளாவிய கேள்வி நிலைமைகளினால் பண்டச் சந்தைகள் செல்வாக்குச்செலுத்தப்பட்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பிரெண்ட் மசகு எண்ணெய் விலைகள், எதிர்வுகூறல் காலத்தின் ஆரம்பத்தில் வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டாலும் அதன்பின்னர் படிப்படியான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய உணவுப் பணவீக்கம் அண்மைய காலத்தில் எதிர்க்கணியத்திற்கு திரும்பலடைந்து அதன் பின்னர் படிப்படியாக உயருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இறைப் பாதை

தற்போதைய எறிவுகளில் இணைக்கப்பட்ட இறைப் பாதையுடன் தொடர்புடைய ஊகங்கள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2025 திசெம்பரில் வெளியிடப்பட்ட 2026ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுடன் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு

2025ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் சிறியளவிலான பற்றாக்குறையொன்று மதிப்பீடுசெய்யப்பட்ட போதிலும், 2025ஆம் ஆண்டிற்கான நடைமுறைக் கணக்கில் மிகையொன்று மதிப்பீடுசெய்யப்பட்டது. பரந்தளவிலான வர்த்தகப் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், 2025 இல் மிகையானது அதிக தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் மேம்பட்ட சுற்றுலா வருவாய்கள் ஆகியவற்றைப் பிரதானமாக பிரதிபலிக்கின்றது.

2.3. அடிப்படை எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்

இவ்வறிக்கையில் வழங்கப்பட்டுள்ளவாறு பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி என்பவற்றுக்கான அடிப்படை எறிவுகளை அடைவதற்கு மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஆகிய இரண்டும் காணப்படுகின்றன. 2026 சனவரி நாணயக் கொள்கை சுற்றிற்கமைய இத்தகைய இடர்நேர்வுகள் பற்றிய விளக்கம் இப்பிரிவில் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் ஆராயப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடர்நேர்வுகளின் அடைவு எறிவுசெய்யப்பட்ட அடிப்படைப் பாதையிலிருந்து விலகுகின்ற உண்மைப் பணவீக்கம் அத்துடன்/அல்லது மொத்த

[6] மத்திய வங்கியானது நடுத்தரகால எறிவுகளுக்கான உள்ளீடுகளாக உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய பேரண்ட பொருளாதார குறிகாட்டிகளின் எறிவுகளைப் பயன்படுத்துகிறது. 2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் 2026 சனவரி 20 அன்று கிடைக்கப்பெற்ற பூர்வாங்க எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

[7] இலங்கையின் ஆறு முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடன் தொடர்புடைய ஏற்றுமதிகளின் இயல்பு நிலைப்படுத்தப்பட்ட பங்குகளைப் பயன்படுத்தி உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பின் எறிவுகளில் தரப்பட்டுள்ள வர்த்தகப் பங்காளர்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வெளியீட்டு இடைவெளியொன்றாக ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது கணிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு இட்டுச்செல்லலாம். மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஆகிய இரண்டும் அடையப்பெறுகின்ற சந்தர்ப்பத்தில், உண்மைப் பணவீக்கம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் திசையானது இவ்விடர்நேர்வுகளின் ஒப்பீட்டு வலிமையினால் தீர்மானிக்கப்படும்.

பணவீக்க எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்

பல மேல்நோக்கிய இடர்நேர்வுகள், பணவீக்கத்தினை எறிவுசெய்யப்பட்ட பாதையிலும் பார்க்க உயர்வான எறிவுப்பாதையொன்றில் செலுத்தக்கூடும். டித்வா புயலுடன் தொடர்புபட்ட தற்காலிக பகிர்ந்தளிப்புக்கள் அண்மைய கால நுகர்வை அதிகரிக்கக்கூடுமென்பதுடன் வலுவான கொடுகடன் வளர்ச்சி மற்றும் மீட்சியடைகின்ற பொருளாதார நடவடிக்கை என்பவற்றுக்கு மத்தியில் கேள்வி அழுத்தங்கள் படிப்படியாக கட்டியெழுப்பப்படுகின்றன. கொடுகடன் வளர்ச்சி பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊடுகடத்தலில் உட்பொதிந்துள்ள தாமதத்தினைக் கருத்திற்கொள்கையில், மிதமிஞ்சிய தனியார் துறை கொடுகடன் வளர்ச்சி நடுத்தரகாலத்தில் கேள்வி அழுத்தங்களுக்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கக்கூடும். இறக்குமதிக் கேள்வி எதிர்பார்த்ததைவிட விரைவாக உயர்வடையுமாயின் தேய்மான அழுத்தம் எறிவுகளை விஞ்சிச்செல்லக்கூடும். பொருளாதார மீட்சி மற்றும் டித்வா தொடர்புபட்ட கட்டுமானம் என்பன இறக்குமதிகளை உயர்வடையச்செய்துடன் எதிர்பார்க்கப்பட்டதையும் விட விரிவான வர்த்தகப் பற்றாக்குறை வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வியை அதிகரிக்கச்செய்யலாம் என்பதுடன் நாணயம் மீது அழுத்தத்தினைத் தீவிரப்படுத்தலாம். மீண்டும் மீண்டும் நிகழும் பாதகமான காலநிலை நிகழ்வுகள் வேளாண்மை உற்பத்திகளை இடையூறுக்குள்ளாக்குவதுடன் மின்சார உருவாக்க கலப்பு மாறுபாடுகளுக்கு வழிவகுக்கக்கூடிய அதேவேளை, மண்ணின் தரம் குறைவடைதல் காலப்போக்கில் வேளாண்மை உற்பத்தித்திறனைக் குறைக்கலாம். இதன் விளைவாக, ஏற்படக்கூடிய ஏதேனும் விடாப்பிடியான வழங்கல்பக்க இடையூறுகள் உணவு மற்றும் வலு விலைகளை உயர்வடையச் செய்யலாம். இத்தாக்கங்கள் தொடர்ந்தும் காணப்படுமாயின், பணவீக்கம் தற்போதைய எறிவுகளை விஞ்சிச்செல்லக்கூடும். ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய முக்கிய பொருளாதாரங்களைச் சூழ்ந்துள்ள விடாப்பிடியான நிச்சயமின்மைகளுடன் உலகளாவிய புவிசார் அரசியல் மற்றும் பேரண்டப்பொருளாதார நிலைமைகள் தளம்பல் மிக்கனவாகக் காணப்படுகின்றன. உலகளாவிய வழங்கல் சங்கிலிக்கும் பண்ட சந்தைகளுக்குமான இடையூறுகள், விலைத் தளம்பலை அதிகரித்து உள்நாட்டு பணவீக்கத்திற்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.

கீழ்நோக்கிய இடர்நேர்வுகளைக் கருத்திற்கொள்ளும் போது, பணவீக்கம் அதன் அண்மைக்கால படிப்படியான அதிகரிப்பிற்கு மத்தியில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட நீண்டகாலத்திற்குக் குறைவடைந்து காணப்படலாம். சம்பளச் சீராக்கங்கள் மற்றும் நிர்வகிக்கப்படுகின்ற விலைத் திருத்தங்கள் உள்ளடங்கலான மாற்றமின்றிய விலை நிர்ணயித்தல் போக்கு, பணவீக்கம் இலக்கு மட்டத்திற்குத் திரும்புவதைத் தாமதப்படுத்தலாம். டித்வா தொடர்புபட்ட இடையூறுகளின் பின்னர் மீண்டும் பயிரிடுவதில் மேம்பட்ட தொடர்ச்சியானது வேளாண்மை வெளியீட்டிற்கு ஆதரவளித்து, உணவு விலை அழுத்தங்களைத் தளர்த்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலக்கிடப்பட்ட அரசாங்க ஆதரவு வேளாண்மை வழங்கலை மேலும் வலுப்படுத்தலாம். குறைவான உலகளாவிய எரிபொருள் விலைகளைப் பிரதிபலித்து, எரிபொருள் விலைகளில் எதிர்பார்க்கப்பட்டதைவிடவும் மெதுவான அதிகரிப்பு வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கத்தை மிதமடையச்செய்யலாம். உலகளாவிய விலை அசைவுகள் மற்றும் வரிச் சீராக்கங்கள் தொடர்பிலான நிச்சயமின்மையும் பணவீக்க எறிவுகளுக்கு தொடர்ந்தும் இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்றன.

தற்போதைய நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கமைய, பணவீக்க எறிவுகளிற்கான இடர்நேர்வுகள் அண்மைய காலம் மற்றும் நடுத்தர காலம் ஆகிய இரண்டிலும் சமநிலைப்படுத்தப்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன.

பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்

அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான வளர்ச்சி எறிவுகளிற்கான சாத்தியமான முக்கிய கீழ்நோக்கிய இடர்நேர்வுகளானவை உலகளாவிய வர்த்தக முரண்பாடுகள் மற்றும் உயர்வடைந்துள்ள புவிசார் அரசியல் நிச்சயமின்மை என்பவற்றிலிருந்து தோற்றம்பெறுவதுடன் அவை முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் அத்துடன் பிரதான சுற்றுலா மூலச் சந்தைகளில் வளர்ச்சிக்கு கீழ்நோக்கிய இடர்நேர்வுகளைத் தொடர்ந்தும் தோற்றுவிக்கலாம். உலகளவில் மெதுவடைந்த வளர்ச்சியும் தீவிரமடைந்த நிச்சயமின்மையும் சுற்றுலாப் பயணி வருகைகளையும், சுற்றுலா பணி ஏற்றுமதிகளையும் நலிவடையச் செய்கின்ற அதேவேளை, இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிக்கான கேள்வியையும் குறைக்கலாம். இவ்வெளிநாட்டு தாக்க நிலைமைகள் ஏற்றுமதி வருவாய்களையும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களையும் குறைவடையச் செய்து, ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கை மற்றும் வளர்ச்சி எதிர்பார்க்கைகள் என்பன மீது தாக்கம் செலுத்தலாம். சார்புப் பக்கத்தில் டித்வா புயல் தொடர்புபட்ட இடையூறுகளின் பின்னர் எதிர்பார்க்கப்பட்டதையும் விட விரைவான மீட்சி, வெளியீட்டு வளர்ச்சிக்கு குறிப்பாக, வேளாண்மை மற்றும் கட்டுமான நடவடிக்கைகளின் மீளத்தொடங்குதல் ஊடாக ஆதரவளிக்கக்கூடும். உட்கட்டமைப்பு வசதி மீள்கட்டுமானமும் உரியகால அரசாங்க ஆதரவும் மீட்சியினை வலிமைப்படுத்தி, பணிகளுக்கு கசிவுகளைத் தோற்றுவித்து பரந்த அடிப்படையிலமைந்த விரிவடைதலுக்கு ஆதரவளிக்கலாம்.

2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு[8]

நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள்

2026 சனவரியில் நாணயக் கொள்கை சுற்றின் போது பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகளின் அடிப்படையில், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளிக்கான தோற்றப்பாடானது 2025 ஓகத்தில் நாணயக் கொள்கை அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டிருந்த 2025 யூலை நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகளுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டுள்ளது. இம்மாற்றத்திற்கு குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலய நாடுகளுடன் தொடர்புபட்ட திருத்தப்பட்ட எறிவுகள் பிரதான காரணமாகவிருந்தது. 2025 யூலை நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் 2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றின் போது பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகள் 2026 காலப்பகுதியில் தாழ்வான உணவுப் பணவீக்க எறிவுப் பாதையையும் அதனைத்தொடர்ந்து 2027இல் சற்று உயர்வான எறிவுப் பாதையையும் சுட்டிக்காட்டுகின்றன. உலக எரிபொருள் விலைகளின் எறிவுப்பாதை, அதிகரித்த புவிசார் அரசியல் உறுதியின்மையிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளைச் சமநிலைப்படுத்தும் வேளையில் மேம்பட்ட வழங்கல் எதிர்பார்க்கைகளுக்கு மத்தியில் 2025 யூலையில் எறிவுசெய்யப்பட்ட பாதையுடன் ஒப்பிடுகையில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கைத் தளர்த்தல் முன்னர் எறிவுசெய்யப்பட்டதைவிடவும் தற்போது விரைவாகக் காணப்பட்டு,

---

[8] 2025 யூலை மாத நாணயக் கொள்கை சுற்றில் பெறப்பட்ட 2025 ஓகத்தின் நாணயக் கொள்கை அறிக்கையில் வழங்கப்பட்ட எறிவுகளுடன் தற்போதைய எதிர்வுகூறல்களை இப்பிரிவு ஒப்பிடுகின்றது.

மெதுவடைகின்ற தொழில்சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் நடுத்தரகாலத்தில் தாழ்வான கொள்கை வீத எதிர்பார்க்கைகளை பிரதிபலிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2026 குறைநிரப்பு வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் முன்வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தற்போதைய எறிவுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ள அதேவேளை, 2025 யூலை நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகள் 2026இன் இறை உபாயக் கூற்றின் அடிப்படையிலமைந்திருந்தன. ஏனைய மாற்றங்களுக்கு மத்தியில் நடப்பு இற்றைப்படுத்தல் 2026 இற்கான உயர்வான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையினை உள்வாங்குகின்றது.

வரைபடம் 07: உலகளாவிய எறிவுகள் (காலாண்டு)



குறிப்பு: அண்மைய உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பு எறிவுகளில், கவனத்திற்கொள்ளப்படும் நாடுகளிலிருந்து முழுமையான அடையப்பட்ட தரவுத் தொகுதி கிடைக்கும் வரை 2025 இன் மூன்றாம் காலாண்டு அதிகளவான அண்மையில் அடையப்பட்ட காலப்பகுதியாகக் கருதப்படும்.

மூலங்கள்: காலாண்டு எறிவு மாதிரி, உலக எறிவு மாதிரி வலையமைப்பு (2025/06/25 மற்றும் 2026/01/20 அன்று இற்றைப்படுத்தப்பட்டது.)

பணவீக்கப் பாதை

2025 ஓகத்து மாத நாணயக் கொள்கை அறிக்கையில் வெளியிடப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், 2025இன் மூன்றாம் காலாண்டில் அடையப்பட்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கமானது பரந்தளவில் எறிவுசெய்யப்பட்ட மட்டத்திற்கு இசைவாகக் காணப்பட்டது. எனினும், 2025இன் நான்காம் காலாண்டில் அடையப்பட்ட பணவீக்கம் முன்னைய எறிவிற்கு சற்று குறைவாகக் காணப்பட்டது. பணவீக்க எறிவுகள் முன்னைய நாணயச் சுற்றின் குறிப்பாக 2026 காலப்பகுதியில் பாதையினை விடவும் பரந்தளவில் தாழ்வாகக் காணப்பட்டு, குறைவான உலகளாவிய எரிபொருள் பாதை மற்றும் மிதமான உணவு விலைகள் என்பவற்றைப் பிரதிபலித்தன. இதற்கு மேலதிகமாக, அடிப்படை விலைகளில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் ஏற்பட்ட குறைவான அதிகரிப்பு, இத்தாழ்வான பணவீக்க எறிவுப்பாதைக்குப் பங்களித்திருக்கலாம். முன்னைய எறிவுக்கு ஒத்திசைவாக பணவீக்கமானது படிப்படியாக உயர்வடைந்து, பொருளாதாரத்தில் மேம்படுகின்ற கேள்வி நிலைமைகளால் துணையளிக்கப்பட்டு நடுத்தரகாலத்தில் இலக்கை நோக்கி ஒருங்கிணைந்து செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைய காலத்தில் மையப் பணவீக்கம் முன்னைய நாணயக் கொள்கைச் சுற்றில் எதிர்பார்க்கப்பட்ட பாதையினைவிட பரந்தளவில் தாழ்வாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, எதிர்வுகூறல் வீச்சின் பிந்திய பகுதியை நோக்கி அது சற்று உயர்வான எறிவுப்பாதையிலமைந்து, உள்நாட்டு கேள்வி வலுப்படுவதை பிரதிபலிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள்

3.1. பணவீக்கம்

பதினொரு மாத கால பணச்சுருக்கத்திற்குப் பின்னர் 2025 ஓகத்தில் நேர்க்கணிய மட்டங்களை அண்மித்த முதன்மைப் பணவீக்கமானது அதன்பின்னர் அதிகரித்துச் செல்கின்ற போக்கொன்றினைத் தொடர்ந்த வேளையில் இலக்கு மட்டத்திற்குக் கீழாகத் தொடர்ந்து காணப்பட்டது.

வரைபடம் 08: முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், **2021=100**)



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2025 ஓகத்தில் நேர்க்கணியமாகத் திரும்பலடைந்தமையானது 11 மாத கால பணச்சுருக்கக் கட்டமொன்றின் நிறைவினைக் குறித்துக்காட்டுகின்றது. புள்ளிவிபரத் தளத் தாக்கங்களுடன் இணைந்து, 2025 யூன் மாத நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தத்தினைத் தொடர்ந்து, வலு மற்றும் போக்குவரத்து வகையில் பணச்சுருக்க அழுத்தங்களின் தளர்த்துகையினால் இத்திரும்பலானது முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டது. அதன்பின்னர், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது படிப்படியாக உயர்வடைந்து, 2025 ஒத்தோபரில் 2.1 சதவீதத்தினை எட்டியதுடன் 2025 திசெம்பர் முழுவதும் தொடர்ந்து மாற்றமின்றிக் காணப்பட்டது.[9] டித்வா புயலினால் ஏற்பட்ட நிரம்பல் சங்கிலி சார்ந்த இடையூறுகள் மற்றும் பண்டிகைக் காலப்பகுதியில் உணவிற்கான உயர்வடைந்த கேள்வி என்பன காரணமாக உணவு விலைகளில் ஏற்பட்ட மாதாந்த அதிகரிப்புகளிற்கு மத்தியில், சாதகமான புள்ளிவிபரத் தளத் தாக்கத்தின் காரணமாக, அவற்றின் தாக்கமானது 2025 திசெம்பரில் ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்தில் பிரதிபலிக்கப்படவில்லை. அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த உணவுப் பணவீக்கமானது 2025 யூனில் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீதத்திலிருந்து (ஆண்டிற்காண்டு) 2025 திசெம்பரில் 3.0 சதவீதத்திற்கு (ஆண்டிற்காண்டு) குறைவடைந்ததுடன் உணவல்லாப் பணவீக்கமானது அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட -2.8

[9] 2026 சனவரியில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2.3 சதவீதத்திற்குத் துரிதமடைந்தது.

சதவீதத்திலிருந்து (ஆண்டிற்காண்டு) 1.8 சதவீதத்திற்குத் (ஆண்டிற்காண்டு) துரிதமடைந்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2025இன் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் ஒட்டுமொத்த மேல்நோக்கிய போக்கொன்றினைக் காட்டியது. இதற்கமைய, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது 2025 யூனில் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதத்திலிருந்து 2025 திசெம்பரில் 2.9 சதவீதத்திற்குத் துரிதமடைந்தது.

வரைபடம் 09: ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்தின் பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)



குறிப்பு: 2018 தனிநபர் நுகர்வின் நோக்கத்திற்கமைவான வகைப்பாட்டினை பயன்படுத்துகின்ற பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் ஒட்டுமொத்த (முதன்மை) நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடைகளிலிருந்து (2021=100) பணிகள் சார்ந்த கூறுகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

வரைபடம் 10: துணைவகை ரீதியான ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)



குறிப்பு: கொ.நு.வி.சுட்டெண் கூடையின் துணை வகைகளின் எடைகள் அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டுள்ளன. நாணயக் கொள்கை அறிக்கை 2025 ஓகத்தின் வெளியீட்டிலிருந்தான அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் பொருட்டு, 2025 திசெம்பரிற்கான அண்மைய கிடைப்பனவாகவுள்ள தரவுகள் 2025 யூனில் அறிக்கையிடப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடப்படுகின்றன.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

மாதாந்த அடிப்படையொன்றில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது சிறுபோக அறுவடையின் கிடைப்பனவுடன் உணவு விலைகளின் தளர்வினால் உந்தப்பட்டு, 2025 யூலை மற்றும் ஓகத்து ஆகிய மாதங்களில் சிறிதளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன், இது 2025 யூன் மாத நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைத் திருத்தத்திலிருந்தான மேல்நோக்கிய அழுத்தங்களை மேலும் எதிரீடுசெய்தது. அறுவடையுடன் தொடர்புடைய நிரம்பல் தாக்கங்களின் இயல்புநிலைக்குத்திரும்பலுடன், முதன்மைப் பணவீக்கமானது (மாதாந்தம்) 2025 செத்தெம்பரில் சிறியளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்ததுடன் 2025 ஒத்தோபரில் பரந்தளவில் மாற்றமின்றித் தொடர்ந்தும் காணப்பட்டது. இருப்பினும், 2025 நவெம்பரில், முதன்மைப் பணவீக்கமானது (மாதாந்தம்) பல்வேறு தளம்பல்மிக்க உணவுப் பொருட்களின் விலைகள் மிதமடைந்தமையின் முக்கிய காரணமாக வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர், முதன்மைப் பணவீக்கமானது (மாதாந்தம்) 2025 திசெம்பரில் சடுதியாக அதிகரித்தமையானது டித்வா புயலினால் ஏற்பட்ட நிரம்பல் சார்ந்த இடையூறுகள் மற்றும் மாத காலப்பகுதியில் உயர்ந்தளவிலான பருவகால பண்டிகைக் கேள்வி என்பவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது.

வரைபடம் 11: மாதாந்த முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

வரைபடம் 12: முதன்மைப் பணவீக்க நிழற்படம் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)



குறிப்பு: 2023 சனவரிக்கு முன்னரான தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை, 2023 சனவரியிலிருந்து தொடங்கும் தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்டுள்ளன. அடிப்படை எடைகள் கொ.நு.வி.சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்டு அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துணை வகையிலுமிருக்கும் உயரம் அவ்வகையின் ("சகல பொருட்கள்"எனும் விடயம் நீங்கலாக) ஒப்பீட்டளவிலான அடிப்படை எடையைப் பிரதிபலிக்கின்றது.

பொருளாதாரத்தில் அடிப்படைப் பணவீக்கப் போக்குகளினைப் பிரதிபலிக்கின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2025இன் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்து துரிதமடைந்தது. இதற்கமைய, மையப் பணவீக்கமானது 2025 யூன் மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட 1.5 சதவீதத்திலிருந்து 2025 திசெம்பரில் 2.7 சதவீதத்திற்குப் படிப்படியாகத் துரிதமடைந்தது.[10] அதேபோன்று, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) மேல்நோக்கிய போக்கொன்றினைப் பின்தொடர்ந்து, 2025 யூனில் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதத்திலிருந்து 2025 திசெம்பரில் 2.6 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2025இன் முதலாவது காலாண்டு மற்றும் 2025இன் இரண்டாவது காலாண்டு என தொடர்ச்சியான காலாண்டுகளிற்கு நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட வீச்சின் 5 சதவீத இலக்கிலிருந்து கீழ்ப் பக்கத்திலிருந்து தொடர்ந்து விலகலடைந்து காணப்பட்டமையினால் மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையானது மத்திய வங்கியின் மூலம் கௌரவ நிதி அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன்

[10] 2026 சனவரியில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2.3 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பொதுமக்களுக்குக் கிடைப்பனவாகக் காணப்பட்டது. கீழ்ப் பக்கத்திலிருந்தான பணவீக்க இலக்கின் மீறுகை குறித்துச் சமர்ப்பிக்கப்பட்ட நான்காவது அத்தகைய அறிக்கையினை இது குறித்துக்காட்டியது. மேலும், காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2025இன் இரண்டாம் காலாண்டிலும் 2025இன் மூன்றாம் காலாண்டிலும் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளிற்கு 3 சதவீதம் கொண்ட கீழ்ப் பக்கத்திலான வீச்சிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையினால் பின்தொடர் (ஐந்தாவது) அறிக்கையொன்று மத்திய வங்கியினால் நிதி அமைச்சரிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 2025இன் நான்காம் காலாண்டிற்கான அடையப்பட்ட காலாண்டுப் பணவீக்கமானது கீழ்ப் பக்கத்திலான வீச்சிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்படுவதனால் மத்திய வங்கி அதன் அடுத்த பின்தொடர் (ஆறாவது) அறிக்கையினை 2026இன் முற்பகுதியில் சமர்ப்பிக்கும்.

முன்னைய காலாண்டுகளினைப் போன்றே, அண்மைய காலாண்டுகளில் இலக்கிலிருந்தான பணவீக்கத்தின் விலகலானது நிரம்பல் பக்கக் காரணிகளினால் குறிப்பாக, வலு மற்றும் போக்குவரத்து வகைகளில் தாழ்ந்தளவிலான பணவீக்கத்தினால் முக்கியமாக உந்தப்பட்டது. இருப்பினும், எறிவுசெய்யப்பட்டவாறு விலகலானது அண்மைய காலாண்டுகளில் சுருக்கமடைந்து செல்கின்றது.

தற்போது கிடைப்பனவாகவுள்ள தகவல்களிற்கமைய[11], முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) ஆகிய இரண்டும் 2025இன் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

முறைசாரா தனியார் துறையில், 2025இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் பெயரளவுக் கூலி வளர்ச்சியானது தொடர்ந்து உயர்வடைந்து காணப்பட்ட வேளையில் உண்மைக் கூலி வளர்ச்சியானது தளர்வடையத் தொடங்கியது. 2025இன் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில், பெயரளவுக் கூலி வளர்ச்சியானது ஆண்டின் இறுதியில் சொற்பளவு மிதமடைவதற்கு முன்னர், மேலும் அதிகரித்ததுடன் மூன்றாவது காலாண்டில் உச்சத்தினை எட்டியது. மாறாக, உண்மைக் கூலி வளர்ச்சியானது 2025இன் இரண்டாம் அரையாண்டு முழுவதும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து, 2025இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க தாழ்ந்தளவிலான மட்டங்களிற்குச் சரிவடைந்தமையானது பணவீக்க நிலைமைகளின் இயல்புநிலைக்குத்திரும்பலினைப் பிரதிபலிக்கின்றது.

பொதுத் துறையில், பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வளர்ச்சி ஆகிய இரண்டும் 2025இன் முற்பகுதியில் உச்சத்தை எட்டியதுடன் சம்பளத் திருத்தங்கள் மற்றும் நிலுவைக் கொடுப்பனவுகள் என்பவற்றினால் உந்தப்பட்டு, கூலி வளர்ச்சியானது 2025இன் முதலாவது அரையாண்டில் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டது. 2025இன் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில், பெயரளவு வளர்ச்சியானது தாழ்ந்தளவிலான மட்டமொன்றில் பரந்தளவில் மாற்றமின்றித் தொடர்ந்து காணப்பட்டதுடன் கூலி வளர்ச்சியானது மிதமடைந்து, உறுதிநிலையினையடைந்து காணப்பட்டது. உண்மைக் கூலி வளர்ச்சியானது மேலும் மெதுவடைந்தமையானது முன்னைய சம்பளத் திருத்தங்களினதும் முன்னைய ஆண்டின் முதலாவது அரைப்பகுதியில் பாரியளவில் நிறைவுசெய்யப்பட்ட நிலுவைக் கொடுப்பனவுகளினதும் விளைவுகள் மற்றும் 2025இன் இரண்டாம் அரையாண்டில் முன்னைய தாழ்ந்தளவிலான மட்டங்களிலிருந்தான பணவீக்கத்தின் இயல்புநிலைக்குத்திரும்பல் என்பவற்றினைப் பிரதிபலித்தது.

[11] இப்பிரிவிலுள்ள தகவல்கள் முதன்மையாக மத்திய வங்கியின் மூலம் தொகுக்கப்பட்ட பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) மற்றும் முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) என்பவற்றின் அடிப்படையிலமைந்துள்ளன.

சிறப்புக் குறிப்பு அ: இலங்கையின் அண்மைய கால பணச்சுருக்க நிகழ்வினை விரிவாக ஆராய்தல்

கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கத்தின் போக்கு

2022 செத்தெம்பரில் உயர்வடைந்த முன்னெப்பொழுதுமில்லாத அதிகரிப்பினைத் தொடர்ந்து, முதன்மைப் பணவீக்கமானது நிலைபெறத்தக்க பணவீக்க வீழ்ச்சிக் கட்டத்திற்கு மாற்றமடைந்து, 2023 நடுப்பகுதியளவில் ஒற்றை-இலக்க மட்டங்களை அடைந்தது. 2024 செத்தெம்பரில் முதன்மைப் பணவீக்கம் எதிர்க்கணிய வீச்சிற்கு நுழைந்ததுடன், கீழ்நோக்கிய போக்கை பின்பற்றிச்சென்று, 1995 மார்ச்[1] மாதத்திற்கு பின்னர் முதல் தடவையாக பணச்சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. பணச்சுருக்க நிகழ்வானது பதினொரு மாதங்களுக்குத் தொடர்ந்து காணப்பட்டது. 2025 ஓகத்தில் சாதகமான மட்டங்களுக்குத் திரும்பிய பணவீக்கமானது அதைத்தொடர்ந்து குறைந்தளவான சாதக மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை படிப்படியாக மேல்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது.

பணச்சுருக்க நிகழ்வின் உந்துசக்திகள்

மிதமடைகின்ற உலகளாவிய வலு விலைகளுக்கு மத்தியில் நிர்வாக ரீதியிலான விலைச் சீராக்கங்களின் முதன்மைக் காரணமாக, வலு மற்றும் போக்குவரத்து வகைகள் அதிகளவிலான கீழ்நோக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் இணைந்து பல்வேறு காரணிகளால் பணச்சுருக்க நிகழ்வானது பங்களிக்கப்பட்டது. வலு மற்றும் போக்குவரத்து வகையினுள், 2024 மார்ச் மற்றும் யூலை மற்றும் 2025 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைகளுக்கான குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய திருத்தங்களினால் வீழ்ச்சியானது முதன்மையாகத் தூண்டப்பட்டது. இதற்கு மேலதிகமாக, அளவில் சிறியதாக இருந்தபோதிலும் பெற்றோல், தன்னியக்க டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு போன்றவற்றின் விலைகளில் பல கீழ்நோக்கிய சீராக்கங்கள் பணச்சுருக்கப் போக்கை மேலும் வலுப்படுத்தின. எனினும், செலவுப் பிரதிபலிப்பு விலையிடலை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட வரலாற்று மேல்நோக்கிய விலைத் திருத்தங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட வலுவுடன் தொடர்புடைய விலைகளின் இத்தகைய கீழ்நோக்கிய சீராக்கங்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், மெதுவடைந்த கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலித்த தாழ்ந்தளவிலான மையப் பணவீக்கமும்[2] பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்தளவிலான முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிக்கும் காரணியொன்றாக காணப்பட்டது. மையப் பணவீக்கம் அண்மைய காலப்பகுதிகளில் பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய மட்டங்களை விடவும் குறைவாகக் காணப்பட்டது (சராசரியாக, மையப் பணவீக்கம் 2010 தொடக்கம் 2020 வரை 5 சதவீதத்தினை அண்மித்து காணப்பட்டது).

வரைபடம் அ.1: முதன்மை, மைய, வலு மற்றும் போக்குவரத்து மற்றும் தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கம் போன்றவற்றின் அசைவு

(கொ.நு.வி.சுட்டெண், 2006/07 =100, 2013=100 மற்றும் 2021=100, ஆண்டிற்கு ஆண்டு)



குறிப்பு: அக்காலக்கட்டத்தில் ஏற்புடைய தொடர்புடைய தள ஆண்டை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வகைக்கான பணவீக்க வீதங்கள் பெறுவிக்கப்பட்டுள்ளன. ஒன்றோடு ஒன்று இணைக்கின்ற போது, பல அவதானிப்புகள் இருக்கும் காலகட்டங்களுக்கு மிகவும் அண்மைய அடிப்படை ஆண்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

முதன்மைப் பணவீக்கம், மையப் பணவீக்கம், வலு மற்றும் போக்குவரத்து சார்ந்த பணவீக்கம் மற்றும் தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கம் போன்றவற்றின் அசைவுகளை வரைபடம் அ.1 எடுத்துக்காட்டுகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் ஏனைய கூறுகளுடன் ஒப்பிடுகையில் வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கத்தின் அசைவு கணிசமாக பாரியளவில் காணப்பட்டுள்ளது என இது எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை, முதன்மைப்

[1] அக்காலக்கட்டத்தில் ஏற்புடைய தொடர்புடைய தள ஆண்டை அடிப்படையாகக் கொண்டு முதன்மைப் பணவீக்கம் பெறுவிக்கப்பட்டுள்ளது. ஒன்றோடு ஒன்று இணைக்கின்ற போது, பல அவதானிப்புகள் இருக்கும் காலகட்டங்களுக்கு மிகவும் அண்மைய அடிப்படை ஆண்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. தொடர்புடைய மாதத்தில் வெளியிடப்பட்ட கொ.நு.வி.சுட்டெண்ணை கருத்திற்கொள்கின்றபோது, 2006/07=100 தளத்தைப் பயன்படுத்தி, எதிர்க்கணிய பணவீக்கமானது 2015 யூலை தொடக்கம் செத்தெம்பர் வரை வெளியிடப்பட்டுள்ளன. எனினும், 2013=100 தளம் பயன்படுத்துகின்ற போது அத்தகைய பணச்சுருக்கம் 2015 காலப்பகுதியில் அவதானிக்கப்படவில்லை.

[2] முதன்மைப் பணவீக்கத்திலிருந்து உணவின் தளம்பலடையும் விலைகள், வலு மற்றும் போக்குவரத்து என்பவற்றை நீக்குவதன் மூலம் மையப் பணவீக்கம் பெறுவிக்கப்பட்டது. இந் நீக்கப்பட்ட பொருட்கள் இச்சிறப்புக் குறிப்பின் வரைபடங்களில் தளம்பலடையும் உணவு, மற்றும் வலு மற்றும் போக்குவரத்து கூறுகளாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பணவீக்கத்திற்கான மையப் பணவீக்கம், வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கம் மற்றும் தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கம் போன்றவற்றின் பங்களிப்பை வரைபடம் அ.2 எடுத்துக்காட்டுகின்றது. அண்மைய காலத்தில் முதன்மைப் பணவீக்கத்திற்கான வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கத்தின் எதிர்க்கணிய பங்களிப்பு கணிசமானளவு இருந்துள்ளது. அதேநேரத்தில், நெருக்கடிக்கு முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் மையப் பணவீக்கத்தின் பங்களிப்பு குறைந்தளவாக காணப்பட்டுள்ளது என்பதையும் நாம் அவதானிக்க முடியும். வலு மற்றும் போக்குவரத்து பணச்சுருக்க காலப்பகுதியை முன்னைய ஆண்டுகளில் இலங்கை எதிர்கொண்ட போதிலும், பெரும்பாலும் 2009இன் நடுப்பகுதி தொடக்கம் 2010இன் தொடக்கக் காலம் வரையான குறிப்பிடத்தக்க காலப்பகுதியிலும், மீண்டும் 2014இன் பிற்பகுதி தொடக்கம் 2016இன் பிற்பகுதி வரையான காலப்பகுதியிலும், அத்தகைய காலப்பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான மைய மற்றும் தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கத்தின் காரணமாக இத்தகைய நிகழ்வுகள் முதன்மைப் பணச்சுருக்கத்திற்கு மாற்றமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வரைபடம் அ.2: முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு
(கொழுவிசு, 2006/07 =100, 2013=100 மற்றும் 2021=100, ஆண்டிற்கு ஆண்டு)



குறிப்பு: அக்காலக்கட்டத்தில் ஏற்புடைய தொடர்புடைய அடிப்படை தள அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வகைக்கான ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு பெறுவிக்கப்பட்டுள்ளது. ஒன்றோடு ஒன்று இணைக்கின்ற போது, பல அவதானிப்புகள் இருக்கும் காலகட்டங்களுக்கு மிகவும் அண்மைய அடிப்படை ஆண்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

அண்மைய காலங்களில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி உத்வேகத்தினால் குறிப்பிடப்பட்டவாறு, உள்நாட்டு கேள்வி நிலைமைகள் மீட்சியடையத் தொடங்கியமையினால் முதன்மைப் பணவீக்கத்தைப் போலன்றி மையப் பணவீக்கமானது எதிர்க்கணியத்திற்கு திரும்பவில்லை. தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளுடன் கூட்டுக் கேள்வி நிலைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் மையப் பணவீக்கத்தின் துரிதமடைதலானது தூண்டப்பட்டுக் காணப்படுகின்றது. எனினும், உயர்வடைதலின் வேகம் படிப்படியாக காணப்படுகின்றது. மேற்கூறிய காரணிகளுக்கு மேலதிகமாக 2024இன் தொடக்கத்தில் பெறுமதி சேர் வரியினால் தூண்டப்பட்ட விலை அதிகரிப்புக்கள் மற்றும் உயர்வடைந்த உணவுப் பணவீக்கம் போன்றவற்றிலிருந்து எழுந்த புள்ளிவிபரத் தளத் தாக்கமும் 2025இன் தொடக்கத்தில் ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் மீதான கீழ்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

இவ்வொன்றுசேர்ந்த அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், பணச்சுருக்கமானது 2025 பெப்புருவரியில் 4.2 சதவீதத்திற்கு தாழ்வடைந்து, பின்னர் பணச்சுருக்கப் போக்கானது படிப்படியாகத் தளர்வடையத் தொடங்கியது. மையப் பணவீக்கத்திற்கு உந்துதலளிக்கின்ற கூட்டுக் கேள்விக்கான படிப்படியான முன்னேற்றங்கள், குறித்த சில மாதங்களில் உணவு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் 2025 யூன் நடுப்பகுதியில் மின்சாரத் தீர்வைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தம் என்பன பணச்சுருக்க நிகழ்வின் நிறைவிற்கு ஒன்றுசேர்ந்த அடிப்படையில் பங்களித்தன. பதிவுசெய்யப்பட்ட ஆரோக்கியமான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்கள், குறைந்தளவிலான தொழிலின்மை வீதம் மற்றும் நெருக்கடிக்குப் பின்னைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட அதன் குறைந்தளவிலான மட்டத்துடன் ஒப்பிடுகையில் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் படிப்படியாக அதிகரித்துச் செல்கின்றதொரு போக்கு என்பவற்றினால் குறித்துக்காட்டப்பட்டவாறு மீட்சியடைந்து வருகின்ற தொழிலாளர் சந்தை நிலைமைகள், தனியார் துறைக்கான அதிகரித்துச் செல்கின்ற கொடுகடன் வளர்ச்சி மற்றும் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இத்தற்காலிகப் பணச்சுருக்க நிகழ்வானது நீடித்த நடவடிக்கை சார்ந்த மெதுவடைதலொன்றினைத் தோற்றுவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது.

ஆதலால், அண்மைய பணச்சுருக்க நிகழ்வானது பொருளாதார மெதுவடைதல் மற்றும் விலைகள் குறைவடைந்து அதன்மூலம், பொருளாதார நடவடிக்கைகளை மேலும் மெதுவடையச் செய்வதற்கு வழிவகுக்கின்ற பணச்சுருக்கச் சுழல் என்பவற்றினால் முக்கியமாக ஏற்பட்டதெனக் கருதுவதிலும் பார்க்க நெருக்கடிக் காலப்பகுதியில்

உச்சளவிலான பணவீக்கத்தின் பின்னரான விலைகளின் சீராக்கமொன்றெனச் சிறப்பாகக் குறித்துக்காட்டப்படலாம்.

கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கத்துடனான உயர்வடைந்த விலைத் தளம்

பணச்சுருக்கக் கட்டத்தினைத் தொடர்ந்து முதன்மைப் பணவீக்கமானது நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைந்த போதிலும், அண்மைய மாத காலப்பகுதியில் பணவீக்கத்தின் துரிதமடைதல் வேகம் ஒப்பீட்டளவில் தொடர்ந்தும் மெதுவடைந்துள்ளது (வரைபடம் அ.3 இனைப் பார்க்கவும்). இப்பெறுபேறானது 2022 பணவீக்க அதிர்வின் போது பதிவுசெய்யப்பட்ட கொ.நு.வி.சுட்டெண் கூடையின் செலவுத் தளத்தின் கணிசமானளவிலான மேல்நோக்கிய மீட்டெடுப்பினை ஓரளவு பிரதிபலிக்கின்றது. இலங்கை ரூபாவின் துரித கதியிலான பெறுமதித்தேய்வு, நிரம்பல் பக்க இடையூறுகள் மற்றும் நீண்ட காலம் தளர்வடைந்த நாணய நிலைமைகளின் காலங்கடந்த ஊடுகடத்தல் சார்ந்த விளைவுகளுடன் இணைந்து ஒப்பீட்டளவில் தேக்கமிக்க வலு விலையிடலின் நீண்ட காலப்பகுதியொன்றிற்குப் பின்னரான வலு விலைகளின் கூரிய மேல்நோக்கிய சீராக்கங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தாக்கமாக இவ்வதிர்வு காணப்பட்டது. எனவே, 2022இல் பதிவுசெய்யப்பட்ட வலு விலைச் சீராக்கங்கள் நீடிக்கப்பட்டதொரு காலப்பகுதியில் தொடர்புடைய செலவுகளின் அடிப்படை அபிவிருத்திகளிற்குப் பதிலிறுத்துகின்ற விதத்தில் விலைகளின் சீராக்கமொன்றாகக் கருத்திற்கொள்ளப்பட முடியும். இருப்பினும், அண்மைய வலு விலை அசைவுகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற மின்சாரத் தீர்வைத் திருத்தங்கள் மற்றும் எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயுவிற்கான கிரமமான மாதாந்த விலைச் சீராக்கங்கள் ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டு, செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் கட்டமைப்புடன் ஒத்திசைந்து செல்வதுடன், இது மிகவும் படிப்படியான மற்றும் கணிக்கக்கூடிய விலை இயக்கவாற்றல்களைத் தோற்றுவித்துள்ளது. இதன் விளைவாக, தற்போதுள்ள பணவீக்கச் சூழலானது ஒப்பீட்டளவில் நிலையானதொன்றாகக் காணப்பட்டாலும் உயர்ந்தளவிலான விலைத் தளத்திலிருந்து தொழிற்படுவதாக அடையாளப்படுத்தப்படக்கூடும். இதன் விளைவொன்றாக, வியாபாரங்கள் விலைகளை நிர்ணயிப்பதில் எச்சரிக்கைமிக்கதோர் அணுகுமுறையைப் பின்பற்றக்கூடுமென்பதுடன் இது குறிப்பாக, பொது மக்களின் கொள்வனவு செய்கின்ற சக்தியின் மிதமான மீட்சியொன்றிற்கு மத்தியில் கணிசமானளவிலான விலை அதிகரிப்புக்கள் விற்பனை அளவுகளில் ஒப்பீட்டளவில் சடுதியான குறைவுகளுடன் தொடர்புடையதாகக் காணப்படக்கூடும். மேலும், பணச்சுருக்கத்தின் முக்கிய உந்துசக்தியாகக் காணப்பட்ட வலு மற்றும் போக்குவரத்து வகையானது எதிர்க்கணிய வீச்சிலிருந்து படிப்படியாக மாத்திரமே தொடர்ந்து மீட்சியடைந்துள்ளது. இம்மீட்சியானது நீடித்ததொரு காலப்பகுதியில் ஏற்பட்ட அடிப்படைச் செலவுகளின் முன்னேற்றங்களிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் புள்ளிவிபரத் தளத் தாக்கங்கள் மற்றும் சடுதியான இடைக்கிடையேயான மாற்றங்களிற்குப் பதிலாகக் கட்டங்கட்டமாக விலைச் சீராக்கங்களினால் முக்கியமாகச் செல்வாக்கிற்குட்பட்டுள்ளது. இவ்வியக்கவாற்றலானது முதன்மைப் பணவீக்க மீட்சியின் மிகவும் வரையறுக்கப்பட்ட வேகத்திற்குப் பங்களித்துள்ளது.

வரைபடம் அ.3: நுகர்வோர் விலைச் சுட்டெண் எதிர் முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சுட்டெண், 2013=100 மற்றும் 2021=100)



குறிப்பு: 2022ஆம் ஆண்டிற்கான பணவீக்கம் கொ.நு.வி.சுட்டெண் (2013=100)இனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நாடு ரீதியிலான ஒப்பீடு

பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா மற்றும் பாகிஸ்தான் போன்ற பிராந்திய நாடுகளின் பொருளாதாரங்கள் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சியடைந்து வருகின்ற பொருளாதாரங்களுடனானதோர் (வரைபடம் அ.4) ஒப்பீடானது உச்சளவிலான பணவீக்கத்திற்குப் பின்னரான இயக்கவாற்றல்களில் பரந்தளவிலான ஒத்த போக்கொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது. இப்பொருளாதாரங்களும் தமது வரலாற்றில் உயர்ந்தளவிலான பணவீக்க மட்டங்களைப் பதிவுசெய்து, இறுதியாக இயல்புநிலைக்குத்திரும்புவதற்கு முன்னர் படிப்படியாகவும் சில சந்தர்ப்பங்களில் தீவிரமான பணவீக்க வீழ்ச்சிப் பாதைகளைப் பின்தொடர்ந்துள்ளன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் பார்க்கின்ற போது, இந்நாடுகளிற்கிடையிலான அனுபவங்கள் 2022இன் உச்சத்தினைத் தொடர்ந்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பணவீக்கச் சுழற்சிக்குப் பரந்தளவில் ஒத்த நிலைமையொன்றினை வெளிப்படுத்துகின்றன. பணவீக்கம் மற்றும் உயர்வடைந்த விலை மட்டங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க எழுச்சியொன்றினைத் தீர்க்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நாணயக் கொள்கைப் பதிலிறுப்புக்களைத்

தொடர்ந்து,பொருளாதாரங்கள், உறுதிநிலைப்படுவதற்கு முன்னர் சிறியளவிலான பணச்சுருக்கத்தினைத் தற்காலிகமாக ஏற்படுத்தக்கூடிய மிகவும் தாழ்ந்தளவிலான பணவீக்கக் கட்டமொன்றினை அடையக்கூடுமென இவை எடுத்துக்காட்டுகின்றன. வரைபடம் அ.4இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு, இத்தகைய தாழ்ந்தளவிலான பணவீக்க நிகழ்வுகள் குறுங்காலத்திலானதாகக் காணப்பட்டு, பணவீக்கமானது அதனைத்தொடர்ந்து குறுகிய மற்றும் குறைந்தளவிலான தளம்பல் வீச்சொன்றினுள் இயல்புநிலைக்குத்திரும்பக்கூடும் என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

வரைபடம் அ.4: உச்சளவிலான பணவீக்கத்தினை எதிர்கொண்ட பிராந்திய ரீதியிலான பொருளாதாரங்களுடன் பணவீக்கத்தின் அசைவுகளை ஒப்பிடுதல் (ஆண்டிற்கு ஆண்டு)



*குறிப்பு: காலப்பகுதியானது பணவீக்கம் உச்சமடைந்த மாதமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மூலங்கள்: பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

முடிவுரை

2022செத்தெம்பரில் உயர்வடைந்த முன்னெப்பொழுதுமில்லாத அதிகரிப்பைத் தொடர்ந்த பொருத்தமான இறுக்கமான நாணயக் கொள்கையினால் உந்தப்பட்டு முதன்மைப் பணவீக்கம் குறைவடைந்தது. இது படிப்படியாக அதிகரிக்கும் நேர்க்கணிய மட்டங்களுக்கு திரும்ப முன்னர் வலு மற்றும் போக்குவரத்து விலைகளில் ஏற்பட்ட கீழ்நோக்கிய சீராக்கங்களின் காரணமாக தற்காலிக பணச்சுருக்கக் காலப்பகுதிக்குப் பிரவேசித்தது. பொருளாதார நெருக்கடிக்கு முன்னர், மின்சாரம் மற்றும் எரிபொருள் போன்ற நுகர்வுப் பொருட்களின் விலைகள் உற்பத்திச் செலவுகளில் படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும் பல ஆண்டுகளாகச் சீராக்கப்படவில்லை. 2022இல், உற்பத்தி செலவில் சடுதியான அதிகரிப்புடன் வியாபாரங்கள் உயர்ந்தளவிலான விலைகளை நிர்ணயித்ததுடன் வலு மற்றும் போக்குவரத்துத் துறைகளின் நிர்வகிக்கப்பட்ட விலைகள் சீராக்கப்பட்டன. மேலும், இவ்விலைத் திருத்தங்களின் குறிப்பிடத்தக்களவிலான இரண்டாம் சுற்றுத் தாக்கங்களும் காணப்பட்டன. இவ்வனைத்துச் சீராக்கங்களும் விலைத் தளத்தில் கட்டமைப்பு சார்ந்த நகர்வொன்றிற்கு வழிவகுத்திருக்கக்கூடும். நெருக்கடி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றமையுடன் இணைந்து பெரும்பாலான பொருளாதார முகவர்களின் கொள்வனவு ஆற்றலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் வியாபாரங்கள் விலையை நிர்ணயிக்கும் உத்திகளில் எச்சரிக்கை மிக்கதோர் அணுகுமுறையைப் பின்பற்றக்கூடும். இது அண்மைக் காலத்தில் மிதமான பணவீக்கத்திற்கு வழிவகுத்திருக்கலாம். முன்னெப்பொழுதுமில்லாத பணவீக்க அதிகரிப்புக்கு பதிலிறுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான கொள்கை வழிமுறைகள் அதிகப்படியான பணவீக்க நிலைமைகளிலிருந்து தவிர்த்து வேகமான பணவீக்க வீழ்ச்சிக்குப் பங்களித்தது. மையப் பணவீக்கமானது காலப்பகுதி முழுவதும் நேர்க்கணியமாகத் தொடர்ந்தும் காணப்பட்டு, படிப்படியாகத் துரிதமடையத் தொடங்கியது. மேலும், ஏனைய பல பொருளாதாரக் குறிகாட்டிகள் குறித்துக்காட்டுவதற்கமைய பொருளாதாரத்தில் மேம்படுகின்ற கேள்வி நிலைமைகளின் தெளிவான சமிக்ஞைகள் காணப்படுகின்றன. முதன்மைப் பணவீக்கமானது நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைவதுடன் விலை அசைவுகள் பெருமளவில் அளவிடக்கூடியவாறும் கணிக்கக்கூடியவாறும் மாற்றமடைந்துள்ளமையானது கேள்வி மீதான சுழல் தாக்கங்களுடன் நீடித்த பணச்சுருக்க இடர்நேர்வுகளின் தோற்றம்பெறலிலும் பார்க்க மிகவும் உறுதியான விலைச் சூழலொன்றிற்கான நிலைமாறுதலொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. இதற்கமைய, இலங்கையின் அண்மைய குறுங்காலத்திலான பணச்சுருக்கக் கட்டமானது அநேகமாகக் கேள்வியினால் உந்தப்பட்ட நிகழ்வொன்றின் விளைவொன்றிலும் பார்க்க விலைகளின் சீராக்க நிகழ்வொன்றாகக் கருதப்படமுடியும். நிறைவாக, அண்மைய பணச்சுருக்க நிகழ்வு மற்றும் பணவீக்கத் துரிதமடைதலின் படிப்படியான வேகம் என்பவற்றுக்கு மத்தியில் பணவீக்கமானது 5 சதவீதம் கொண்ட இலக்கினை நோக்கிப் படிப்படியாக ஒத்திசைந்து செல்கின்றதென்பது இன்னமும் வலிதானதொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், இவ்வொருங்கிசைவின் வேகம் எதிர்பார்த்ததிலும் பார்க்க மெதுவாக நிகழக்கூடும்.

வரைபடம் 13: முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத்துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் (2016=100) அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

3.2. *உண்மைத் துறை*

இலங்கைப் பொருளாதாரமானது 2025இன் மூன்றாம் காலாண்டில் வலுவான விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தமையானது 2025இன் முதல் ஒன்பது மாதங்கள் முழுவதும் உறுதியான வளர்ச்சி உத்வேகமொன்றினைப் பிரதிபலித்தது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், பொருளாதாரமானது 2024இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2025இன் தொடர்புடைய காலப்பகுதியில் 5.0 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. மேலும், 2025இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில், சகல மூன்று முக்கிய பொருளாதாரத் துறைகளிலுமிருந்தான நேர்க்கணியப் பங்களிப்புக்களுடன் பொருளாதாரமானது 5.4 சதவீத (ஆண்டிற்காண்டு) வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. வேளாண்மை நடவடிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியானது எண்ணெய் சார்ந்த பழங்களின் பயிர்ச்செய்கை (தேங்காய், செவ்விளநீர், செம்பனை எண்ணெய்), விலங்கு உற்பத்தி மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை ஆகியவற்றினால் பாரியளவில் உந்தப்பட்டது. தொழிற்றுறை நடவடிக்கைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது தயாரிப்பு, கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் ஆகிய துணைத்துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் உந்தப்பட்டது. அதேவேளை, பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு நிதியியல் பணிகள், போக்குவரத்து மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கிய காரணமாயமைந்தது.

அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான மதிப்பீடுகள் (ஆண்டிற்காண்டு, %) (தற்காலிகமானது)

பொருளாதார நடவடிக்கை	2024					2025			
	கா1	கா2	கா3	கா4	வருடாந்தம்	கா1	கா2	கா3	9 மாதங்கள்
வேளாண்மை	0.9	2.7	3.7	-2.2	**1.2**	-0.7	2.0	3.6	**1.6**
கைத்தொழில்	11.2	9.7	10.1	13.1	**11.0**	9.7	5.8	8.1	**8.0**
பணிகள்	2.5	1.9	2.6	2.5	**2.4**	2.8	3.9	3.5	**3.4**
மொ. உ. உற்பத்தி	**5.1**	**4.1**	**5.3**	**5.4**	**5.0**	**4.8**	**4.9**	**5.4**	**5.0**

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

காலாண்டின் இறுதியில் டித்வா புயலினால் ஏற்பட்ட இடையூறுகளிற்கு மத்தியில், 2025இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளில் பாரியளவிலான தாக்குப்பிடிக்குந்தன்மையினை முன்கூட்டிய குறிகாட்டிகள் பிரதிபலிக்கின்றன. முன்னைய காலாண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி உத்வேகத்துடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2025இன் பிற்பகுதியில் ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. நேர்க்கணிய முன்னேற்றங்களினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், பணிகள், தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கம் ஆகிய துறைகளிற்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2025இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தன.[12] இருப்பினும், வேளாண்மை நடவடிக்கைகள் 2025இன் நான்காம் காலாண்டில் கலவையான பெறுபேறுகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றமையானது பாதகமான வானிலை நிலைமைகளினால் ஏற்பட்ட இடையூறுகளினை முதன்மையாகப் பிரதிபலிக்கின்றது.

[12] அண்மைய தரவு வெளியீட்டின்படி, பணிகள் மற்றும் தயாரிப்பு என்பவற்றிற்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2025 திசெம்பரில் முறையே 67.9 மற்றும் 60.9இற்கு மேலும் மேம்பட்ட வேளையில், கட்டவாக்கம் சார்ந்த மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது 2025 திசெம்பரளவில் 67.1ஆகக் காணப்பட்டது. அதேவேளை, கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2025 திசெம்பரில் 99.0ஆகப் பதிவுசெய்யப்பட்டது.

வரைபடம் 14: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அசைவுகள்





மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நிலையான விலைகளில் செலவினப் பக்கத்தினைப் பொறுத்தவரை, 2025இன் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது நுகர்வுச் செலவினத்தினால் துணைபுரியப்பட்டது. இது குடியிருப்பாளர் இறுதி நுகர்வுச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினால் முதன்மையாக உந்தப்பட்டது. இருப்பினும், மொத்த நிலையான மூலதன உருவாக்கமானது வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களித்த போதிலும், இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் கையகப்படுத்தல்களிலிருந்து கழித்தொதுக்கப்பட்ட பெறுமதிகள் என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மொத்த மூலதன உருவாக்கமானது 2025இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் ஓரளவு சுருக்கமடைந்தது. மேலும், பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் இறக்குமதிகளின் வளர்ச்சி நிலையான விலைகளில் ஏற்றுமதிகளில் அதன் வளர்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2025இன் மூன்றாம் காலாண்டில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி சுருக்கமடைந்தது.

அட்டவணை 02: ஒட்டுமொத்தக் கேள்வி (தற்காலிகமானது)

விடயம்	நிலையான (2015) விலைகள்							
	2024 கா3		2024 9 மாதங்கள்		2025 கா3		2025 9 மாதங்கள்	
	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %
உள்நாட்டுக் கேள்வி	3,189	9.7	9,218	6.4	3,391	6.3	9,807	6.4
நுகர்வு	2,611	4.1	6,979	0.7	2,821	8.0	7,518	7.7
முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்)	577	44.4	2,240	29.3	570	(1.3)	2,289	2.2
தேறிய வெளிநாட்டுக் கேள்வி	(35)	(139.9)	4	(97.0)	(65)	(88.0)	(121)	(3189.7)
+ பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள்	795	9.0	2,272	11.9	827	4.0	2,406	5.9
- பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள்	830	29.0	2,268	19.5	892	7.5	2,528	11.4
மொத்த உள்நாட்டு உற்பத்தி	**3,154**	**5.3**	**9,222**	**4.9**	**3,326**	**5.4**	**9,686**	**5.0**

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

3.3. நாணயத் துறை

வட்டி வீதங்கள்

மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்துசெல்லும் வகையில் 2025இல் ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதக் கட்டமைப்பு பரந்தளவில் கீழ்நோக்கிச் சீராக்கமடைந்துள்ள அதேவேளை, 2025இன் பிற்பகுதியில் குறுங்கால வட்டி வீதங்களில் அவதானிக்கப்பட்ட ஒழுங்கின்மைகள் 2026 தொடக்கத்தில் சரிசெய்யப்பட்டுள்ளன.

2025 மேயில், 25 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட கொள்கை வீதக் குறைப்பினைத் தொடர்ந்து, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் யூலை பிற்பகுதி வரை மேலும் கீழ்நோக்கிச் சீராக்கமடைந்து ஓரிரவு கொள்கை வீதத்தைச் சுற்றியமைந்து காணப்பட்டது. எனினும், பங்கேற்கும் நிறுவனங்களுக்கிடையில் உள்நாட்டுப் பணச் சந்தை திரவத்தன்மை பகிர்ந்தளிப்பில் ஏற்பட்ட தொடர்ச்சியான சமச்சீரற்ற தன்மை காரணமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் அதன்பின்னர் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. இதற்கமைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஓரிரவு கொள்கை வீதத்தை விடவும் அதிகமாகக் காணப்பட்டு, 2025இன் இறுதியளவில் ஏறத்தாழ 30 அடிப்படைப் புள்ளிகள் விலகலொன்றைப் பதிவுசெய்தது. தனியார் துறைக்கான கொடுகடன் மற்றும் இறக்குமதிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, வங்கித்தொழில் முறைமையில் மேலதிக திரவத்தன்மையை உட்செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பதால், இந்த விலகலை மத்திய வங்கி சகித்துக்கொண்டது. ஒட்டுமொத்த சந்தைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் திரவத்தன்மை பகிர்ந்தளிப்பிலுள்ள வேறுபாடுகளை ஓரளவு தளர்த்தியதன் மூலம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2026 சனவரி பிற்பகுதியில் ஓரிரவு கொள்கை வீதத்திற்கு கீழே நகர்ந்து, 2025இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மட்டத்திலிருந்து சனவரி 27 வரையான காலப்பகுதியில் ஏறத்தாழ 30 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

வரைபடம் 15: ஓரிரவு கொள்கை வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் அசைவுகளுடன் இசைந்துசெல்லும் வகையில், சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் 2026இன் தொடக்கத்தில் மிதமடைவதற்கு முன்னர், 2025இன் பிற்பகுதியில் அதிகரித்திருந்தது.

குறைந்த மட்டங்களில் உறுதியடைந்திருந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதமானது 2025இன் பிற்பகுதியில் காணப்பட்ட அரச பிணையங்களின் விளைவுகள் மற்றும் அதிகரித்து வரும் வைப்பு வட்டி வீதங்கள் உள்ளடங்கலாக குறுங்கால சந்தை வீதங்களின் நடத்தையைப் பிரதிபலிக்கும் வகையில் மேல்நோக்கிய அழுத்தத்தை எடுத்துக்காட்டியது. இதற்கமைவாக, 2025 ஓகத்து தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதமானது ஏறத்தாழ 85 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தது. எனினும், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் கீழ்நோக்கிய சீராக்கங்களுக்கு இசைந்துசெல்லும் வகையில் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் 2026இன் தொடக்கத்தில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

2025ஆம் ஆண்டில் ஏனைய சந்தை கடன்வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்களின் ஒன்றுசேர்ந்த குறைப்பு காணப்பட்ட போதிலும், குறுங்கால வட்டி வீதங்கள் மற்றும் திறைசேரி உண்டியல் விளைவுகளில் அவதானிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் சில வங்கிகள் அனுபவித்த திரவத்தன்மை கட்டுப்பாடுகள் போன்றவற்றை பகுதியளவில் பிரதிபலித்து, சில அதிகரிப்புக்கள் 2025 திசெம்பரில் அவதானிக்கப்பட்டன.

வரைபடம் 16: தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்



மூலம்:. இலங்கை மத்திய வங்கி

குறைந்தளவான பணவீக்கச் சூழல் மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025 காலப்பகுதியில் முதலாந்தர ஏலங்களின் அனைத்து முதிர்ச்சிகளிலும் திறைசேரி உண்டியல் விளைவுகள் 50-90 அடிப்படைப் புள்ளிகளினால்

வீழ்ச்சியடைந்தன. யூலை நடுப்பகுதியில் விளைவுகளில் சில மேல்நோக்கிய அழுத்தங்கள் அவதானிக்கப்பட்ட போதிலும், குறுங்காலப் பகுதிகளின் விளைவுகளில் ஏற்பட்ட மிதமிஞ்சிய குறைப்பு ஓரளவு மாற்றியமைக்கப்பட்டு, 2025இன் பெரும்பாலான காலங்களில் விளைவுகள் ஒப்பீட்டளவில் நிலையாகக் காணப்பட்டன. எனினும், புயலுக்கு பின்னரான மீட்பு முயற்சிகளுக்காக அரசாங்கத்தின் சாத்தியமான அதிக கடன்பெறுகை மீதான சந்தை மனோபாவத்தினால் தூண்டப்பட்டு, 2025 திசெம்பரின் பிற்பகுதியில் விளைவுகள் குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய சீராக்கமொன்றைப் பதிவுசெய்தன. எவ்வாறெனினும், நீண்டகால திறைசேரி முறிகளுக்கான சந்தை நாட்டம் நிலையாகக் காணப்பட்டதுடன், திறைசேரி உண்டியல் விளைவுகள் அண்மைய ஏலங்களில் ஓரளவு தளர்வடைதலைக் காண்பித்தது. இத்தகைய இடைக்கிடையான தளம்பல்கள் காணப்பட்டபோதிலும், ஒட்டுமொத்த இரண்டாந்தர சந்தை விளைவு வளையி 2024இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மட்டங்களிலும் பார்க்க கீழே காணப்படுகின்றது.

அதேவேளை, 2025 ஒகத்தில் பணவீக்கம் நேர்மறையாகத் திரும்பலடைந்து அதன்பின்னர் ஏற்பட்ட அதிகரிப்புடன், உண்மை வட்டி வீதங்கள் அண்மையில் சரிவொன்றைக் கண்டன. எதிர்வரும்காலத்தில், எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தின் இலக்கை நோக்கிய ஒருங்கிணைப்புடன் உண்மை வட்டி வீதங்கள் மேலும் தளர்வடைவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

வரைபடம் 17: அவதானிக்கப்பட்ட உண்மை வட்டி வீதங்கள்



குறிப்பு: மாதாந்த உண்மை வட்டி வீதம் (கொ.நு.வி.சு – அடிப்படையாகக் கொண்டது) பெயரளவு வட்டி வீதத்தை ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கு சீராக்குவதன் மூலம் பெறப்படுகின்றது

மூலம்:. இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை

2025ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் தொடர்ந்து மிகையாக காணப்பட்டன.

2025ஆம் காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை ரூ. 136 பில்லியன் கொண்ட சராசரியொன்றில் காணப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளும் மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு நாணயப் பரஸ்பர பரிமாற்றல்களும் ஆண்டுகாலப்பகுதியில் இம்மிகைக்கு பாரியளவில் துணையளித்தன. அதேவேளை, அரசாங்கம் தமது வெளிநாட்டு நாணயப்

படுகடனை தீர்ப்பனவு செய்வதற்காக மத்திய வங்கியிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட காசு மீளப்பெறுகைகள் மற்றும் ரூபாய் திரவத்தன்மையின் பயன்பாடு அதேபோன்று மத்திய வங்கி அதன் திறைசேரி முறி உடைமைகளைக் கொண்டிருப்பதன் காரணமாக அதற்கான நறுக்கு பெறுகைகள் போன்றன ஆண்டுகாலப்பகுதியில் ஏற்பட்ட திரவத்தன்மை குறைப்பிற்கு பங்களித்திருந்தன. 2026 சனவரி 27இல் உள்ளவாறு, முக்கியமாக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாணியின் தேறிய கொள்வனவுகளினால் ஆதரவளிக்கப்பட்டு, உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை மிகையானது ஏறத்தாழ ரூ. 165 பில்லியனைக் கொண்ட சராசரிக்கு அதிகரித்தது.

பணச் சந்தை நடவடிக்கையைப் பொறுத்தவரையில், கொடுக்கல்வாங்கல் அளவுகளின் தொடர்ச்சியான அதிகரிப்பொன்றுடன், அழைப்புச் சந்தை மற்றும் மீள்கொள்வனவு சந்தைகள் ஆகிய இரண்டும் முனைப்புடன் வர்த்தகத்தை மேற்கொண்டு வருகின்றன.

வரைபடம் 18: ஓரிரவு திரவத்தன்மை, ஓரிரவு கொள்கை வீதம் மற்றும் பணச் சந்தை வீதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல்

2025இல், தனியார் துறைக் கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, விரிந்த பணம் (M_{2b}) தொடர்ந்து விரிவடைந்தது.

2025இல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடன் ஏறத்தாழ ரூ. 2.1 றில்லியனினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இதற்கமைவாக, தனியார் துறைக்கான கொடுகடன் 2024இன் 10.7 சதவீதம் (ஆண்டிற்காண்டு) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2025இல் 25.2 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வளர்ச்சியடைந்தது. தொடர்ச்சியான ஆறு மாதங்களுக்கான மாதாந்தக் கொடுகடன் விரிவாக்கம் ரூ. 200 பில்லியனை விஞ்சியதுடன், 2025 திசெம்பர் நீங்கலாக, 2025 யூன் தொடக்கம் தனியார் துறைக்கான கொடுகடனின் குறிப்பிடத்தக்க உயர்வடைதல் அவதானிக்கப்பட்டது. 2025ஆம்

காலப்பகுதியில் தனியார் துறை கொடுகடனில் ஏற்பட்ட இந்த விரிவாக்கத்திற்கு பொருளாதார நடவடிக்கையின் விரிவாக்கமும் 2025இன் தொடக்கத்தில் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தியதன் பின்னர் வாகன இறக்குமதிகளுக்கான நிதியிடலுக்கான அதிகரித்த கேள்வியும் காரணமாக அமைந்தன. மேலும், அரச துறைக் கொடுகடனின் மெதுவடைதலானது தனியார் துறைக்கான கொடுகடனின் விரிவாக்கத்திற்கான மேலதிக இடத்தை உருவாக்கியுள்ளது. அதேவேளை, 2025ஆம் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் பரந்த அடிப்படையிலானதாக காணப்பட்டது. தனியார் துறைக்கான துறை வாரியான பகிர்ந்தளிப்புக்களின் நியதிகளுக்கமைய, 2025இன் இதுவரையான காலப்பகுதியில் கைத்தொழில் துறைக்கான கொடுகடனைத் தொடர்ந்து பணிகள் துறையானது தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அதேவேளை, தனியாள் கடன்களும் முற்பணங்களும் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றன. மேலும், பிரதானமாக வாகன இறக்குமதிகளுக்கான அதிகரித்த நிதியிடலைப் பிரதிபலித்து, நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடன் 2025இல் ரூ. 789 பில்லியன் கொண்ட விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்து, 2025இன் இறுதியளவில் 49.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் இருந்தபோதிலும், மொ.உ.உற்பத்தி விகிதத்திற்கான தனியார் துறை கொடுகடன் ஒப்பீட்டளவில் 2025இன் மூன்றாம் காலாண்டில் 29.8 சதவீதமாக விளங்கியதுடன், இது நெருக்கடி மட்டத்திற்கு கீழே காணப்பட்டது.

வரைபடம் 19: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடனின் மாதாந்த மாற்றம்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 20: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான துறைசார் கொடுகடன்



மூலம்:. இலங்கை மத்திய வங்கி

2025 ஆண்டுகாலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையினால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் ரூ.15 பில்லியன் கொண்ட சிறிதளவிலான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. இந்த ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பு, முறி விளைவுகளின் மிதமடைதலுக்கு மத்தியில் மத்திய வங்கியின் அரச பிணையங்களின் உடைமைகள் மீதான மதிப்பீட்டு சீராக்கங்களுக்கு முற்றிலும் பங்களிக்கத்தக்கதாக காணப்பட்டது. அரசாங்கத்தின் முயற்சிகளைப் பிரதிபலித்து, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2025 காலப்பகுதியில் ரூ.39 பில்லியன் கொண்ட சுருக்கமொன்றைப் பதிவுசெய்து, பிரதானமாக அரச வங்கிகளுடனான அரச வைப்புக்களின் வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை உரக் கூட்டுத்தாபனம் போன்றன உள்ளடங்கலாக, முக்கியமாக பிரதான அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட பகுதியளவிலான தேசிய மீள்கொடுப்பனவுகள் காரணமாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2025இல் ரூ.137 பில்லியனினால் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தது.

2025 காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்தும் மேம்பட்டு, மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன. ஒட்டுமொத்த விரிவாக்கத்திற்கு பங்களிக்கும் வகையில், மத்திய வங்கியின் அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தும் பொருட்டு அதன் வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஆண்டு காலப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பொன்றை மாத்திரம் பதிவுசெய்தன.

இத்தகைய அபிவிருத்திகளுக்கு இசைந்துசெல்லும் வகையில், விரிந்த பணத்தின் (M_{2b}) ஆண்டிற்காண்டு வளர்ச்சியானது 2024இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.6 சதவீதத்திலிருந்து 2025இன் இறுதியளவில் 11.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரைபடம் 21: விரிந்த பணத்தின் (M_{2b}) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு



குறிப்பு: 2025ஆம் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் ஏனைய வகைகளின் எதிர்க்கணியப் பெறுமதியின் (தேறிய) ஒப்பீட்டளவிலான அதிகரிப்பானது அதிகரித்த பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களையும் ஒதுக்குகளையும் பாரியளவில் காணப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

3.4. வெளிநாட்டுத் துறை

வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமைக்கு மத்தியில், 2025இல் நடைமுறைக் கணக்கானது மிகையொன்றைப் பதிவுசெய்துள்ளதாக மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. இது, இதுவரையில்லாதளவிற்கு உயர்ந்தளவிலான ஆண்டு மிகையாக விளங்குகின்றது. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் மற்றும் பல்புடை நிறுவனங்களிடமிருந்தான பெறுகைகள் போன்றவற்றினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு, வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளுக்கு மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஆண்டுக் காலப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை, இரு ஆண்டுகளின் தொடர்ச்சியான உயர்வடைதலைத் தொடர்ந்து, ஐ.அ.டொலருக்கெதிராக 5.6 சதவீத தேய்மானமொன்றை இலங்கை ரூபா பதிவுசெய்தது.

சென்மதி நிலுவை

2025இல் நடைமுறைக் கணக்கானது ஐ.அ.டொலர் 1.7 பில்லியன் மிகையொன்றைப் பதிவுசெய்துள்ளதாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்களவு சுருக்கத்துடன் இணைந்து, இது பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் ஏற்பட்ட வலுவான செயலாற்றங்களினால் உந்தப்பட்டது. வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2024இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிலிருந்து 2025இல் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனிற்கு விரிவடைந்தது. 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025இல் 6.3 சதவீதம் கொண்ட ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியை இறக்குமதிச் செலவினத்தில் 14.0 சதவீதத்தினால் ஏற்பட்ட விரிவாக்கம் விஞ்சிக் காணப்பட்டமை இதற்குப் பிரதான காரணமாகும். 2025இல் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 13.6 பில்லியனாக விளங்கி, இதுவரை இல்லாத உயர்ந்தளவினைப் பதிவுசெய்ததுடன் 2022இல் அடையப்பட்ட ஐ.அ.டொலர் 13.1 பில்லியன் கொண்ட முன்னைய உச்சளவினையும் விஞ்சின. அதேவேளை, இறக்குமதிகள் மீதான செலவினம் 2018இல்

பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 22.2 பில்லியன் கொண்ட முன்னைய உச்சளவிலான பதிவிற்கு பின்னர், பிரதானமாக உயர்ந்தளவிலான வாகன இறக்குமதிகளினால் தூண்டப்பட்டு, 2025இல் ஐ.அ.டொலர் 21.5 பில்லியனாக விளங்கியது. 2025 சனவரியில் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் 2025 ஏப்பிறல் தொடக்கம் வாகன இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இதற்கமைவாக, தனியாள் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகன இறக்குமதிகள் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகள் மீதான செலவினம் 2025இல் ஐ.அ.டொலர் 2.0 பில்லியனாக உயர்வடைந்து, இறக்குமதிச் செலவினம் மீதான மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியதுடன் வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடையச்செய்தது.

வரைபடம் 22: வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு



மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

வரைபடம் 23: தனியார் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகனங்களின் இறக்குமதிகளின் உள்ளமைப்பு



மூலம்: இலங்கை சுங்கம்

2025இல் வரலாற்றிலேயே உயர்ந்தளவிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவுசெய்யப்பட்டபோதிலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நாளொன்றுக்கான சராசரிச் செலவினம் மற்றும் சராசரி தங்கும் காலம் ஆகியவற்றின் மதிப்பீடுகள் கீழ்நோக்கி

திருத்தப்பட்டதன் காரணமாக சுற்றுலாத் துறையிடமிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 3.2 பில்லியனாக மதிப்பீடுசெய்யப்பட்டு, 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.6 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. மேலும், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2025இல்[13] ஐ.அ.டொலர் 8.1 பில்லியனாக விளங்கி, 2024இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 22.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றைப் (ஆண்டிற்காண்டு) பதிவுசெய்தது.

வரைபடம் 24: சுற்றுலாத் துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்

சுற்றுலாப் பயணி வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்*



மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

* நாளொன்றிற்கான சராசரி செலவிடல் மற்றும் சராசரி தங்கும் காலம் என்பனவற்றின் மதிப்பீடுகள் 2025இல் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் கீழ்நோக்கித் திருத்தப்பட்டுள்ளன.

தொழிலாளர் பணவனுப்பல்கள்**



** தொழிலாளர் பணவனுப்பல்கள் டித்வா புயலினைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற ஏனைய பணவனுப்பல்களை உள்ளடக்கலாம்.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
உரிமம்பெற்ற வங்கிகள்

வரைபடம் 25: வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

[13] தொழிலாளர் பணவனுப்பல்கள் டித்வா புயலினைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற ஏனைய பணவனுப்பல்களை உள்ளடக்கலாம்.

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டபோதிலும், நிதியியல் கணக்கின் செயலாற்றம் குறைவடைந்துள்ளது. 2025 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாதகாலப்பகுதியில் தொடர்பற்ற தரப்பினர்களிடமிருந்தான நேரடி முதலீட்டு தொழிற்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 589 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 891 மில்லியனாக காணப்பட்டன. அதேவேளை, 2025 காலப்பகுதியில், அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 248 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்த அதேவேளை முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2025இல் ஐ.அ.டொலர் 122 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.

வரைபடம் 26: நிதியியல் கணக்கு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலாவணி வீதம்

அதிகரித்த இறக்குமதி கேள்வியினால் பாரியளவில் தூண்டப்பட்டு, 2025இன் பின்னைய காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது சில தேய்மான அழுத்தத்தை எடுத்துக்காட்டியது. இதற்கமைய, 2025இல் இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலரிற்கெதிராக 5.6 சதவீதத்தால் தேய்வடைந்தது. இலங்கை ரூபாவானது ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கெதிராக 0.1 சதவீத சிறிதளவிலான அதிகரிப்புடன் ஒப்பீட்டளவில் உறுதித்தன்மையுடன் காணப்பட்டது. அதேவேளை, நாணயங்களுக்கிடையிலான அசைவுகளைப் பிரதிபலித்து, 2025 காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், சீன யுவான், யப்பான் யென், இந்தியன் ரூபா மற்றும் அவுஸ்திரேலியன் டொலர் போன்ற ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது. மேலும், இலங்கை ரூபாவினது பெயரளவுத் தேய்மானத்துடன் இசைந்து செல்லும் வகையில், பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆகிய இரண்டும் வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 27: செலாவணி வீத அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒதுக்குச் சொத்துக்கள்

அரச மற்றும் மத்திய வங்கியின் தொடர்ச்சியான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்[14] 2024இன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிலிருந்து 2025இன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியன் வரை கட்டியெழுப்பப்பட்டன. ஆண்டுக்காலப்பகுதியில் ஒதுக்குத் திரட்சியானது, உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் மதிப்புள்ள (பெறுமதித் திகதி அடிப்படையில்) வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகளால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டன. பல்தரப்பு நிறுவனங்களிலிருந்தான உட்பாய்ச்சல்களும், குறிப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான உட்பாய்ச்சல்கள், அத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் துரித நிதியளிப்புச் சாதனம் என்பவற்றின் இரு தொகுதிகளின் கிடைப்பனவும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிக்க உதவின.

வரைபடம் 28: மாதாந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஒதுக்கு போதுமானதன்மை மற்றும் தேறிய உள்ளீர்ப்பு



குறிப்பு: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் பயன்படுத்தத்தக்க நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியின் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் வசதியை உள்ளடக்குகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

[14] பயன்படுத்தத்தக்க நிபந்தனைகளுக்குட்பட்டவாறான சீன மக்கள் வங்கியின் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் வசதி ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது.

3.5. இறைத் துறை

2025இன் முதல் பதினொரு மாதக்காலப்பகுதியில் தொடர்ச்சியான வலுவான அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி வழிமுறைகளால் தூண்டப்பட்டு, இறைத்துறைச் செயலாற்றம் மேலும் வலுவடைந்தது.

2025 சனவரி தொடக்கம் நவெம்பர் மாத காலப்பகுதியில், அரசாங்கத்தின் அரசிறை மற்றும் கொடைகள் பெயரளவு நியதிகளில் 35.4 சதவீத ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது முக்கியமாக வரி அரசிறையால் தூண்டப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுகையில் 36.8 சதவீதமாக அதிகரித்து, தொடர்புடையக் காலப்பகுதியில் ரூ. 4,611.5 பில்லியனை எட்டியது. கலால் தீர்வைகள், பெறுமதி கூட்டப்பட்ட வரி, வருமான வரிகள், இறக்குமதி தீர்வைகள், சிறப்பு பண்டத் தீர்வைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தீர்வைகள் என்பவற்றிலிருந்தான வரி வருமானங்களின் அதிகரிப்பு வரி அரசிறையின் அத்தகைய குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு காரணமாகவிருந்தன. 2025இன் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில், வாகன இறக்குமதியுடன் தொடர்புடைய வரிகளால் பாரியளவில் தூண்டப்பட்டு, அரசாங்கம் அதன் வருடாந்த வரி அரசிறை இலக்கின் ஏறத்தாழ 98 சதவீதத்தினை அடைந்தது. அதேபோன்று, வரியல்லா அரசிறையும் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025 நவெம்பருடன் முடிவடைந்த பதினொரு மாத காலப்பகுதியில் 19.2 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை, 2025 சனவரி தொடக்கம் நவெம்பர் மாத காலப்பகுதியில், மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ஆண்டுக்காண்டு 8.3 சதவீதத்தால் அதிகரித்தன. மானியங்கள் மற்றும் மாற்றல்கள், சம்பளம் மற்றும் ஊதியங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான அதிக செலவினங்கள் இவ்அதிகரிப்புக்கு பிரதானமாக உந்துதளித்தது. மேலும், 2024இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025 சனவரி தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதியில் மூலதனச் செலவினம் 6.6 சதவீதத்தால் அதிகரித்து, 2025இன் ஆரம்பத்தில் மெதுவடைதலொன்றினை எதிர்நோக்கியதன் பின்னர் உத்வேகத்தினை அடைந்தது.

இச்சாதகமான இறை அபிவிருத்திகளுடன், 2025 சனவரி தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதியில், பெயரளவு நியதிகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (எறிவுசெய்யப்பட்ட) நியதிகளிலும் அனைத்து மூன்று முக்கிய இறை நிலுவைகளும் மேம்பட்டன. இதற்கமைய, ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை சுருக்கமடைந்த அதேவேளை, ஆரம்ப மீதி மிகை கணிசமானளவு அதிகரிப்பொன்றினை பதிவு செய்து, 2024இன் அதே காலப்பகுதியின் ரூ. 927.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025 சனவரி தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதியில் ரூ. 1,941.8 பில்லியனை அடைந்தது.

வரைபடம் 29: முக்கிய இறை மீதிகள்



மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

டித்வா புயலினைத் தொடர்ந்து, மக்களின் பாதிக்கப்பட்ட வாழ்வை மீள்கட்டமைப்பதற்கான மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்புகளை மீளமைப்பதற்கான சவால்களை இறைத் துறை எதிர்கொள்கின்றது. இதற்கான தீர்வினை காண்பதற்காக, அரசாங்கம் பல்வேறு நிவாரண வழிமுறைகளையும், நாடெங்கிலும் சேதமடைந்த உட்கட்டமைப்புகளை மீள்கட்டியெழுப்பும் முன்னெடுப்புகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதற்கமைய, ஆரம்ப மிகையின் எதிர்பார்க்கப்பட்ட அதிகளவிலான செயலாற்றம் 2025 காலப்பகுதியில் அனர்த்த நிவாரண வழிமுறைகளுக்கு நிதியளிப்பதற்கான வசதியை வழங்கியுள்ளது. மேலும், 2026ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்திற்காக ரூ. 500 பில்லியன் குறைநிறப்பு மதிப்பீட்டினை பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. இக்கூடுதல் நிதியிடலானது, ஏற்கனவேயுள்ள காசுத் தாங்கியிருப்புக்களின் பயன்பாட்டினூடாக மேற்கொள்ளப்படும் அதேவேளை, 2026ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, 2026இற்கான கடன்பெறுகைகள் ரூ. 3,740 பில்லியனாக மாற்றமின்றி காணப்படும்.

3.6. நிதியியல் துறை

நிதியியல் துறையானது சாதகமான பேரண்டப்பொருளாதார நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, மேம்பட்ட செயலாற்றத்துடன் தாக்குப்பிடிக்குந்தன்மையுடன் காணப்பட்டது.

நிதியியல் துறையின் தாக்குபிடிக்குந்தன்மை 2025 காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தது. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பனவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக 2025இல் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் விரிவடைந்தன. இதற்கமைய, 2025ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த சொத்துக்கள் 12.6 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்து ரூ. 24.9 டிரில்லியனாகக் காணப்பட்டது. மேலும், தளர்வடைந்த நாணயக் கொள்கை நிலைமைகளுக்கு மத்தியில் மொத்த கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் வளர்ச்சியானது 21.5%இற்கு (ஆண்டிற்காண்டு) குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன் 2025இன் இறுதியில் ரூ.13.9 டிரில்லியனை அடைந்தன.

வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த கடன் மீள்செலுத்த தவறும் இடர்நேர்வு, நிலை 3 கடன்கள் விகிதத்தின் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு, 2024இன் 12.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025இன் இறுதியில் 9.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இத்துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் ஆண்டுக்காலப்பகுதியில் அதிகரித்ததுடன், 2024இன் ரூ. 324.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025இல் ரூ. 369.1 பில்லியனை அறிக்கையிட்டு, ஆண்டுக்கு ஆண்டு 13.8 சதவீதத்த வளர்ச்சியை பதிவு செய்தது. எவ்வாறாயினும், பங்குரிமை மீதான வருவாய், சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் தேறிய வட்டி எல்லை போன்ற இலாபக் குறிகாட்டிகள், 2024இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2025இன் இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க கொடுகடன் விரிவாக்கத்துடன் இணைந்து, திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்களால் அளவிடப்பட்டவாறு, வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மையானது முன்னைய ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2025இன் இறுதியில் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, ரூபாய் திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதமானது 2024இன் இறுதியில் காணப்பட்ட 349.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025இன் இறுதியில் 283.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, அனைத்து நாணய திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்கள் 2024இன் இறுதியில் காணப்பட்ட 313.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025இன் இறுதியில் 249.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், துறை திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்கள் குறைந்தபட்ச தேவைப்பாடான 100 சதவீதத்தை விட அதிகமாக காணப்பட்டன. அதேவேளை, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட அதிக வளர்ச்சியால் ஆதரவளிக்கப்பட்டு, முன்னைய ஆண்டின் 18.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறையின் மொத்த மூலதன போதுமை விகிதமானது 2025 செத்தெம்பர் இறுதியில் 18.7 சதவீதமாக மேம்பட்டது. இதற்கமைய, ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் 2025 செத்தெம்பர் இறுதியில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியொன்றிற்கெதிராக 17.6 சதவீதத்தால் (ஆண்டுக்கு ஆண்டு) அதிகரித்தது.

அதிகரித்த கடன்கள் மற்றும் முற்பணங்களால் பிரதானமாக ஆதரவளிக்கப்பட்டு, 2025இன் இறுதியில் நிதிக் கம்பனிகள் துறை அதன் சொத்துத் தளத்தில் 44.0 சதவீத ஆண்டுக்கு ஆண்டு விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது. இதற்கமைய, அதிகரித்த வாகன மற்றும் தங்கத்தினால் பிணையமிடப்பட்ட கடன்கள் என்பனவற்றினால் தூண்டப்பட்டு, இத்துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2025இன் இறுதியில் 51.9 சதவீத ஆண்டுக்கு ஆண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன் விளைவாக, பிணையுறுதி அடிப்படையிலான கடன்வழங்கல் மீதான துறையின் தங்கியிருத்தலை பிரதிபலித்து, துறையின் கொடுகடன் சொத்துப்பட்டியலானது வாகனங்கள் மற்றும் தங்கம் என்பவற்றிற்கெதிரான கடன்கள் மீது உயர்ந்தளவு கரிசனையைக் கொண்டிருந்தது. துறையின் மொத்த நிலை 3 கடன்கள் விகிதமானது, 2024இன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 11.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2025இன் இறுதியளவில் 6.1 சதவீதமாக குறைவடைந்து, கொடுகடன் தரத்தில் மேம்பாட்டினை சுட்டிக்காட்டுகிறது. இத்துறையின் திரவத்தன்மை நிலைமையானது ரூ. 74.3 பில்லியன் திரவத்தன்மை மிகையுடன் 2025இன் இறுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை விட அதிகமாக காணப்பட்டது. மேலும், இத்துறையானது 2025 ஏப்பிறல் - திசெம்பர் காலப்பகுதியில் ரூ. 61.5 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலாபத்தை அறிக்கையிட்டு, 2025/26 நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 45.0 சதவீத ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை பதிவுசெய்தது. மூலதனப் போதுமான தன்மை நியதியில், நிதிக் கம்பனிகள் துறையானது 2025இன் இறுதியளவில் 18.7 சதவீத மூலதனப் போதுமை விகிதத்தைப் பதிவுசெய்தது.

அட்டவணை 03: வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகள் துறைகளின் முக்கிய நிதியியல் ஆற்றல்தன்மைக் குறிகாட்டிகள்

முக்கிய குறிகாட்டிகள் (%)	2024இன் இறுதியிலுள்ளவாறு	2025இன் இறுதியிலுள்ளவாறு (தற்காலிகமானது)
வங்கித்தொழில்துறை		
மொத்த நிலை 3 கடன்கள் விகிதம்	12.3	9.4
சொத்துக்கள் மீதான வருவாய்	2.6	2.5
பங்குரிமை மீதான வருவாய்	17.4	16.6
தேறிய வட்டி எல்லை	4.4	4.3
மூலதனப் போதுமை விகிதம்	20.3	17.9
நிதிக் கம்பனிகள் துறை		
மொத்த நிலை 3 கடன்கள் விகிதம்	11.5	6.1
சொத்துக்கள் மீதான வருவாய்	5.8	6.3
பங்குரிமை மீதான வருவாய்	12.8	16.2
தேறிய வட்டி எல்லை	10.9	10.6
மூலதனப் போதுமை விகிதம்	21.3	18.7

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2025இன் இறுதியிலுள்ளவாறு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ராண்டட் மற்றும் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் 2024இல் பதிவுசெய்யப்பட்ட 49.7 சதவீதம்

மற்றும் 58.5 சதவீத ஆண்டு வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில், முறையே 41.9 சதவீத மற்றும் 26.6 சதவீத ஆண்டு இலாபத்தினை அடைந்துடன் பங்குரிமைச் சந்தையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. பங்குரிமைச் சந்தையின் மேல்நோக்கிய போக்கானது உள்நாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த பங்கேற்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டது. வலுவான வருடாந்த செயலாற்றத்திற்கு மத்தியில், நவெம்பர் 12இலிருந்து 2025 இறுதிக்குள், அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ரான்டட் மற்றும் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் முறையே 4.4 சதவீதம் மற்றும் 6.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன், நவெம்பர் நடுப்பகுதியிலிருந்து சந்தைச் சுட்டெண்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், 2026 சனவரி 27இல் உள்ளவாறு, அனைத்து பங்கு விலைச் சுட்டெண்கள் மற்றும் ஸ்ரான்டட் மற்றும் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் முறையே 5.9 சதவீதம் மற்றும் 8.4 சதவீத ஆண்டுக்கு இதுவரையான காலப்பகுதியில் இலாபத்தினைப் பதிவுசெய்ததுடன், 2026இன் ஆரம்பத்தில் சந்தை மீள்நோக்கிய உத்வேகத்தை மீளப்பெற்றுக்கொண்டது.

2025 காலப்பகுதியில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட 21 கம்பனிகள், 2024 காலப்பகுதியில் 12.00 சதவீதத்திலிருந்து 15.25 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சில் 10 கம்பனிகளால் திரட்டப்பட்ட ரூ. 94.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 9.75 சதவீதத்திலிருந்து 13.15 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சில் நிறுவனத் தொகுதிக் கடன்வழங்கலினூடாக ரூ. 133.2 பில்லியனை திரட்டியது. எவ்வாறாயினும், 2025 காலப்பகுதியில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இரண்டாந்தர சந்தையில் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலொன்றினை எதிர்நோக்கி, ஐ.அ.டொலர் 127.7 மில்லியன் ஒன்றுசேர்ந்த தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலொன்றினை விளைவித்தது.

3.7. உலகளாவிய அபிவிருத்திகள்

பெருகிவரும் கொள்கை மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்றத்தன்மைக்கு மத்தியில், வேகமாக அதிகரித்துவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களாலும் கொள்கை ஊக்குவிப்புகளாலும் ஆதரவளிக்கப்பட்டு, உலகளாவிய பொருளாதார எறிவுகள் வளர்ச்சியில் அதிகளவிலான தாங்குப்பிடிக்குந்தன்மையினை சமிக்ஞைப்படுத்துகின்றன. உலகளாவிய பணவீக்கமானது மெதுவடைந்துவரும் கேள்வி மற்றும் தாழ்ந்தளவிலான வலு விலைகள் என்பவற்றுடன் மேலும் தளர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சவால்மிக்க பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், உலகளாவிய நாணயக் கொள்கை தளர்வின் நீடிப்பிற்கு பின்னரான காலப்பகுதியில், உலகளாவிய நாணயக் கொள்கை நிலைப்பாடானது வட்டி வீதங்களை தாழ்வான மட்டத்தில் வைத்திருப்பதைக் காட்டிலும் மிகவும் எச்சரிக்கையான நிலைப்பாட்டிற்கு அண்மையில் மாறுதலடைந்துள்ளது.

2026இல், உலகளாவிய வளர்ச்சியானது வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் என்பவற்றினால் பிரதானமாக தூண்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டு 4.0 சதவீதத்தினால் விரிவடையுமென எறிவுசெய்யப்படும் அதேவேளை, முன்னேற்றமடைந்தப் பொருளாதாரங்கள் 1.8 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.[15] வர்த்தக மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் போன்றவற்றின் காரணமாக வளர்ச்சித் தோற்றப்பாடு கீழ்நோக்கி சாய்வாகக் காணப்படுவதால், நிரம்பல் சங்கிலிகள் மற்றும் பண்டங்களின் விலைகள் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும். மேலும், நீண்டக் கால வட்டி வீதங்கள் மீதான அழுத்தம் அதன் பயனாக பரந்தளவிலான நிதியியல் நிலைமைகள் மீதும் அழுத்தத்தை தோற்றுவிக்கக்கூடிய பாரிய இறைப்

[15] 2026 சனவரி 19 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் அண்மைய இற்றைப்படுத்தலின்படி, உலகளாவிய வளர்ச்சியானது 2027இல் 3.2 சதவீதத்திலிருந்து 2026இல் 3.3 சதவீதமாக தாக்குப்பிடிக்குந்தன்மையுடன் காணப்படும் என்று எறிவுசெய்யப்படுகின்றது. இது 2025 ஒத்தோபர் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டிலிருந்து சிறிதளவு திருத்தப்பட்டது.

பற்றாக்குறைகளும் உயர்ந்தளவிலான பொதுப் படுகடனும் உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புக்களுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளாக காணப்படுகின்றன. மெதுவடைந்துவரும் கேள்வி மற்றும் தாழ்ந்தளவிலான வலு விலைகள் என்பவற்றின் அனைத்தையுமுள்ளடக்கிய போக்குகள் நீடித்துக் காணப்படுவதால், உலகளாவிய பணவீக்க எறிவுகள் கடந்த எறிவுகளிலிருந்து பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்பட்டன.[16]

அண்மைய வீழ்ச்சிக்கு மத்தியில், உலகளாவிய கொள்கை நிச்சயமற்றதன்மைச் சுட்டெண்ணால்[17] சுட்டிக்காட்டப்பட்டவாறு உலகளாவிய நிச்சயமற்றதன்மையானது உயர்வடைந்து காணப்படுகின்றது. அதேவேளை, உலகளாவிய வர்த்தக நிச்சயமற்றதன்மைச் சுட்டெண்ணும்[18] உயர்வடைந்து காணப்படுவதோடு, அதிகரித்து வரும் புவிசார் அரசியல் முரண்பாடுகள், பாதுகாப்புவாதத்தை நோக்கி நகரும் வர்த்தகக் கொள்கைகளில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள், மற்றும் பொருளாதார தேசியவாதத்தின் எழுச்சி என்பவற்றின் இணைந்த காரணமாக வர்த்தகப் பதற்றங்களை காண்பிக்கின்றது.

வரைபடம் 30: உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மைச் சுட்டெண்



மூலம்: fred.stlouisfed.org

உலகளாவிய நாணயக் கொள்கை நடுநிலையான அல்லது எச்சரிக்கையான நிலைப்பாட்டை நோக்கி அதிகளவில் சார்ந்துள்ளதோடு, உயர்வடைந்த உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில், இது எச்சரிக்கையான கொள்கைசார் பரிசீலனைகளை பிரதிபலிக்கின்றது. 2025இல் நான்கு தொடர்ச்சியான வீதக் குறைப்புக்களைத் தொடர்ந்து, ஐரோப்பிய மத்திய வங்கியானது அதன் மூன்று முக்கிய வட்டி வீதங்களை 2025 யூனிலிருந்து மாற்றமின்றிப் பேணியது. 2025 ஒத்தோபரின் வீதக் குறைப்புக்களைத் தொடர்ந்து, அமெரிக்க பெடரல் ரிசேர்வானது பெடரல் நிதிய வீதத்தை மேலும் குறைத்து, 2025 திசெம்பரில் மூன்றாவது வீதக் குறைப்பினை குறித்துக்காட்டியது. பொருளாதார நடவடிக்கைகளில் மிதமடைவு, தொழில் பெறுகைகளின் மெதுவடைவு, மற்றும் உயர்வடைந்த தொழிலின்மை வீதம் அத்துடன் அதிகரித்த பணவீக்கம் போன்றவற்றை இக்கொள்கை தீர்மானத்தில் கருத்திற்கொள்ளப்பட்ட காரணிகளாக அமெரிக்க பெடரல் ரிசேர்வ்

[16] உலகளாவிய பணவீக்கமானது 2026இல் 3.8 சதவீதமாகவும் 2027இல் 3.4 சதவீதமாகவும் இருக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2025 ஒத்தோபர் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டிலிருந்து மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

[17] https://fred.stlouisfed.org/series/GEPUCURRENT

[18] https://worlduncertaintyindex.com/data/

காரணம் காட்டிய அதேவேளை, பொருளாதார தோற்றப்பாட்டினை சுற்றியுள்ள நிச்சயமற்றதன்மை உயர்வடைந்துக் காணப்பட்டமையையும் குறித்துக்காட்டியது. 2025 திசெம்பரில், வீழ்ச்சியடைகின்ற பணவீக்கத்திற்கு மத்தியில் குறைவடைந்தப் பொருளாதார வளர்ச்சியைக் காரணம் காட்டி, இங்கிலாந்து வங்கியானது வங்கி வீதத்தை குறைத்தது. நிச்சயமற்ற வர்த்தகக் கொள்கைகள் மற்றும் பணவீக்கத்தில் மிதமான உயர்வு என்பவற்றைக் காரணம் காட்டி 2025 திசெம்பர் காலப்பகுதியில் நாணயக் கொள்கையை இறுக்கமாக்கிய ஒரே மத்திய வங்கியான யப்பான் வங்கி அதன் தீர்மானத்தை நியாயப்படுத்தியது. சீன மத்திய வங்கி அதன் அடிப்படை கடன்வழங்கல் வீதங்களை மாற்றமின்றி பேணியதோடு, பொருளாதாரத்தில் மெதுவடைதலுக்கு மத்தியில், மிதமானளவில் தளர்வடைந்த நாணயக் கொள்கையை குறித்துக்காட்டியது. அதேவேளை, வலுவான வளர்ச்சி மற்றும் தாழ்ந்தளவிலான பணவீக்கம் என்பவற்றை நாடு எதிர்கொள்கின்றதால், இந்திய ரிசேர்வ் வங்கி 2025 திசெம்பரில் கொள்கை மீள்கொள்வனவு வீதத்தை குறைப்பதற்கு தீர்மானித்தது. இவ்வடிப்படை வட்டி குறைப்பினைத் தொடர்ந்து, எதிர்வரும் காலத்தில் நடுநிலையான கொள்கை நிலைப்பாட்டொன்றினைத் தொடரலாம் என இந்திய ரிசேர்வ் வங்கி அறிவித்தது.

வரைபடம் 31: உலகளாவிய கொள்கை வீத மாற்றங்கள்



குறிப்பு: 27 சனவரி 2026 அன்று கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையிலமைந்தது. மூலம்: https://www.cbrates.com

உலகளாவிய உணவுப் பண்டங்கள் மற்றும் வலு விலைகள் 2025இல் பதிவுசெய்யப்பட்ட மட்டங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது தொடர்ந்தும் மிதமான மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனினும், 2025இல் நிரம்பல் பக்க கரிசனைகளின் காரணமாக உலகளாவிய எண்ணெய் விலைகள் அவ்வப்போதான தளம்பல்களை எடுத்துக்காட்டியது. எனினும், வெனிசுவேலாவிலும் ஈரானிலும் அதிகரித்த புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், நிரம்பல் நிச்சயமற்றதன்மையினால் தூண்டப்பட்டு, 2026 சனவரியில் விலைகள் சில மேல்நோக்கிய அழுத்தத்தினை எதிர்நோக்கியது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச் சுட்டெண் 2024ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 127.3 புள்ளிகளிலிருந்து 2025 ஓகத்தில் 130.0 புள்ளிகளை அடைந்ததன் பின்னர், 2025 திசெம்பரில் 124.3 புள்ளிகளாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கியமாக, சாதகமான நிரம்பல் நிலைமைகளுடன், பால் பொருட்கள், சீனி மற்றும் தானியங்கள் விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாயமைந்தன.

வரைபடம் 32: உலகளாவிய வலு விலைகளின் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைகளின் அசைவுகள்





மூலம்: உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

மூலம்: fred.stlouisfed.org

ISBN 978-624-6764-22-7